விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 04 புதன்கிழமை (17.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

## தென்னை மரத்தின் கீழ் இளைப்பாறியவர்கள் மீது

# மின்னல் தாக்கியதில்

# மூவர் பரிதாபகரமாக பலி

## யாழ். குப்பிளான் பகுதியில் சோகம்



தி.கண்ணன் | ர.சுதா | க.மைனாவதி

இடிவிழுந்த தென்னை

(யாழ்ப்பாணம்) தென்னை மரத்துடன் கூடிய தோட்டத்து கொட்டிலில் இளைப்பாறிய மூவர் மீது மின்னல் தாக்கியதில் அவர்கள் மூவரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். (23-ம் பக்கம்...)

யாழின் சில பகுதிகளில்

## இடி, மின்னலுடன் நேற்று கடும் மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில பகுதிகளில் நேற்று மதியத்துக்குப் பின்னர் பாரிய இடி மின்னலுடன் மழை பெய்துள்ளது.பல மாதங்களுக்குப் பின்னர் 24

## வேலைக்குச் சென்ற யுவதியை காணவில்லை

பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

வேலைக்கு சென்ற யுவதி ஒருவர் வீடு திரும்பவில்லை என நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நெல்லியடி 24

## நாடளாவிய ரீதியில் மோதல் காரணமாக ஆறு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 48 மணி நேரங்களுக்குள் இடம்பெற்ற மோதல்களின் காரணமாக ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவங்களுடன் தொடர்புடைய 11 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் 23

## கன்டர் வாகனம் மோதியதில் இராணுவப் பொலிஸார் பலி

முல்லை 3ம் கட்டையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு 3ஆம் கட்டைப் பகுதியில் கன்டர் வாகனம் மோதியதில் இராணுவ பொலிஸார் ஒருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு 3ஆம் கட்டைப்பகுதியில் முல்லைத்தீவில் இருந்து முள்ளியவளை நோக்கி பயணித்த கன்டர் வாகனம் ஒன்று வற்றாப்பளையில் இருந்து சென்ற உந்துருளி மீது மோத முற்பட்ட வேளை வீதியினை விட்டு விலகி ஓரமாக சென்று விபத்தினை ஏற் 24

ரவியின் கருத்துக்கு

## அமைச்சர் சஜித் காட்டமான பதில்

(கொழும்பு)

தன்னைப் பற்றி அரசியல் மேடைகளில் வெவ்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதாகவும், எதிர்வரும் நாட்களில் நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? என்பதை நாட்டு மக்களுக்கு தெரிந்து கொள்ள முடியுமாக இருக்கும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்ச 23

## நோயாளருடன் 10 நிமிடமாவது மருத்துவர் செலவிட வேண்டும்

சுகாதார அமைச்சால் புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

தேசிய வைத்தியசாலைகளில் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களை மருத்துவ நிபுணர்கள் குறைந்தது 10 நிமிடங்கள் பார்வையிடவேண்டும் என்ற புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர சுகாதார சேவைகள் மற்றும் போசாக்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த மாதம் தொடக்கம் இந்தப் புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரும் வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நடைமுறையைப் பின்பற்றுவதை உறுதி செய்யும் 24

மக்களுக்கான சேவை பாதிக்கப்பட்டால்

## சமுர்த்தி வங்கி அரச வங்கியுடன் இணைக்கப்படும்

அமைச்சர் தயா கமகே எச்சரிக்கை

(கொழும்பு)

சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பால் மக்களுக்கான சேவைகள் பாதிக்கப்படுமாயின் அனைத்து சமுர்த்தி வங்கிகளையும் அரச வங்கிகளுடன் இணைத்துவிடுவதே சரியான நடவடிக்கையாக அமையும் என்று சிறுகைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் 23

பளை கரந்தாய் பகுதியில்

## ஆக்கிரமித்த காணிக்குள் அதிரடியாக நுழைந்த மக்கள்

கொட்டகை அமைத்து போராட்டம்

(பளை)

பளைப் பகுதியில் தென்னை அபிவிருத்தி சபை கைப்பற்றி வைத்துள்ள காணிகளிற்குள் பொது மக்கள் நேற்று உள்நுழைவு போராட்டம் நடத்தி, காணிகளிற்குள் கொட்டகை அமைத்துள்ளனர்.

பளை கரந்தாய் பகுதி 24

## வடமராட்சியில் தொடர் திருட்டு

சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(கரணவாய்)

யாழ். வடமராட்சிப் பகுதியில் தொடர் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்தேக நபர் வடமராட்சிப் பகுதியில் வைத்து 23

## கனேடிய உயர்ஸ்தானிகர், ஈரான் தூதுவருடன் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் சந்திப்பு



வடக்கின் அபிவிருத்தி, குடிநீர் பிரச்சினை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினோனுக்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் கொழும்பில் 23

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில்

## 850 ஆண்டுகள் பழமையான தேவாலயத்தில் தீ விபத்து

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள மிக புகழ்பெற்ற தேவாலயத்தில் பெரும் தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

பாரம்பரிய சின்னமாக திகழும் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

# மணிவிழாவும் பணிநயப்பும்



## செல்லத்துரை படியலிங்கம்

மணிவிழா நாயகன் திரு.செல்லத்துரை படியலிங்கம் ஆசிரியர் இன்று (17.04.2019) தமது அறுபதாவது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் இவ் வேளை, அவர் நீண்ட ஆயுளும் சகல வளங்களும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராக பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் ஆசிரியரது அரும்பணிகளை நன்றியோடு நினைவில் கொள்வதோடு அவரது ஓய்வுக் காலம் மன மகிழ்வாக அமைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

சித்திரத்தை
பத்திரமாய் தினம் புகட்டி - மாணவரை
படி ஏற்றினீர்
உத்தமராய் அவர் வாழ - நல்
வழிகாட்டினீர்
விளையாட்டுப் போட்டிகளில் - உம்
வினைதிறன் கண்டு வியந்தோம்
அன்பால் அனைவரையும் கவர்ந்தீரே
அருந் சேவையால் மனங்களில்
உயர்ந்தீரே... வாழி

### சேவை விபரம்

| | | |
|---|---|---|
| 16.03.1990 | 14.11.1999 | கிளி/ஆனைவிழுந்தான் சி.த.க. பாடசாலை |
| 15.11.1999 | 15.10.2000 | கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 16.10.2000 | 09.09.2002 | கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம் |
| 10.09.2002 | 05.05.2005 | கிளி/முருகானந்த கல்லூரி |
| 06.05.2005 | 16.04.2019 | கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி |

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி.

(C-6143)




# பிறந்தநாள் வாழ்த்து

## ம.பிரியதர்சன்

இன்று (17.04.2019) புதன்கிழமை
21 ஆவது பிறந்த நாளை
கொண்டாடும் ம.பிரியதர்சன்
அவர்களை வாழ்த்துகின்றோம்.

R.P.N. நண்பர்கள்

(C-6145)

தென்மராட்சி கச்சாய், பாலாவி பகுதிகளில்

# இருவேறு வீடுகளுக்குள் புகுந்து குழு ஒன்று தாக்குதல்

## இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கச்சாய் மற்றும்பாலாவி பகுதிகளில்நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.00 மணியளவில் இருவேறு வீடுகளிற்குள் குழுவொன்று நுழைந்து தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்

இச் சம்பவத்தில் கச்சாய் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 38வயதான ம.நவீன், பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 45வயதான மா.மகேசன் ஆகிய இருவரும் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் நேற்று செவ்வாய்க் கிழமை காலை கச்சாய் வீதி சங்கிலியன் கிணற்றடிப் பகுதியில் வீதியால் பயணித்த இளைஞனை குழுவொன்று வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 19 வயதான இளைஞன் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

# துயர் பகிர்வு



எமது கல்லூரி ஆசிரியையான
திருமதி கலைவாணி சுந்தரசிவம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி விருத்தாசலம்
அன்னம்மா**
அவர்கள் 15.04.2019 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி**

(8493)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண வலயக்கல்விப்
பணிப்பாளர்
திரு சு.சுந்தரசிவம் அவர்களின்
மாமியார்
**திருமதி விருத்தாசலம்
அன்னம்மா**
அவர்கள் காலமான செய்தி அறிந்து
துயரடைவதுடன் அவரின் குடும்
பத்தினருக்கு அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.**

(8490)

# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா புவனேஸ்வரி



கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் சோழன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா புவனேஸ்வரி அவர்கள் நேற்று (16.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதி - நாகம்மா தம்பதியரின் மருமகளும், நடராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஜெயகரன், பிரபாலினி மற்றும் பிரபாகரன் (பாலன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(8494)

சோழன் தோட்டம், கோண்டாவில். தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துலக சட்டங்களின் படி

# இலங்கைப் படைகளின் மீறல்களுக்கு கோத்தாவே பொறுப்புக்கூற வேண்டும்

### சட்ட நிபுணர் ஸ்கொட்கில்மோர் வலியுறுத்து



(கொழும்பு)

அனைத்துலக சட்டங்களின்படி, இலங்கைப் படைகளால் நிகழ்த்தப்பட்ட மீறல்களுக்கு கட்டளை வழங்கியவர் என்ற வகையில், கோத்தபாய ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டியவர் என்று அனைத்துலக சட்ட நிபுணர் ஸ்கொட் கில்மோர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக கலிபோர்னியா மத்திய மாவட்ட நீதிமன்றத்தில், றோய் சமாதானம் என்ற கனடாவைச் சேர்ந்த தமிழரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிவில் வழக்கை சட்ட நிபுணர் ஸ்கொட் கில்மோர் கையாளவுள்ளார்.

இவர், ஊடகவியலாளர் மேரி கொல்வின் 2012ஆம் ஆண்டு சிரியாவில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக . சிரிய ஆட்சியாளர்களுக்கு எதிராக 300 மில்லியன் டொலர் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்ட வழக்கை நடத்தியவராவார்.

றோய் சமாதானம் கொழும்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருந்து சித்திரவதை செய்யப்பட்டிருந்தார். அதற்கு இழப்பீடு கோரியே கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாரிஸ் தேவாலயத்தில் பயங்கர தீவிபத்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த வருத்தம்!

(கொழும்பு)

பிரான்ஸ் தலைநகர், பாரிஸில் அமைந்துள்ள 850 வருட பழைமையான நோட்ரே டாம் தேவாலயத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்து மிகவும் வருத்தமளிக்கின்றது என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பாரிஸில் அமைந்துள்ள நோட்ரே டாம் தேவாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தால் தேவாலயத்தின் மேற்கூரை பற்றி எரிய ஆரம்பித்தது. சிறிது சிறிதாகப் பரவிய தீ, தேவாலயம் முழுவதையுமே ஆக்கிரமித்ததால் மேற்கூரை இடிந்து விழுந்தது.

இந்தச் சம்பவம் குறித்து உலக நாடுகளிலுள்ள தலைவர்கள் கருத்து தெரிவித்துவரும் நிலை யில் மகிந்த ராஜபக்ஷவும் டுவிட்டரில் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில், பிரான்ஸில் வரலாற்று சின்னமாக விளங்கும் தேவாலயத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்து தொடர்பாக தான் மிகவும் வருந்துவதாக தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தையடுத்து குறித்த தேவாலயத்தை மீண்டும் கட்டி பழைய நிலைமைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கடினமான நேரத்தில் பிரான்ஸ் மக்களுடன் இலங்கை உறுதுணையாக நிற்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த அணியில் குமார வெல்கம

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால், குமார வெல்கமவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியில் நிறுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக தகவல்களில் தெரியவந்துள்ளது.

மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிட வேண்டும் என்று அந்தக் கட்சியின் ஒரு பகுதியினர் கருதுகின்றனர். பொதுவேட்பாளராக குமார வெல்கமவை நிறுத்த வேண்டும் என்றுபொதுஜன பெரமுன தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

விரைவில் கூட்டு எதிரணித் தலைவர்கள் இதுபற்றி ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. (7)

## தனியார் துறையின் சம்பள அதிகரிப்புக்காக சட்டமூலம்

(கொழும்பு)

தனியார்துறையின் குறைந்த பட்ச சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் விரைவாக சட்ட மூலமொன்றை முன்வைக்க வுள்ளதாக அமைச்சரவை அந் தஸ்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களும் இதில் உள்ளடங்கும் வகையில், இந்த சம்பளத் திருத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், கடந்த வாரம் இது தொடர்பில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ள தென்றும் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புக்காக தேசிய தொழிலாளர் ஆலோசனை பேரவையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## பாக் .தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

பாகிஸ்தானிய தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரதிநிதிகள் இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஷாஹித் அஹ்மத்தை நேற்று உயர்ஸ்தானிகராலயத்தில் சந்தித்தனர்.

பாகிஸ்தானிய விமானப்படை அதிகாரி முஸ்தபா அன்வரின் வழிநடத்தலின் கீழ் இக்குழுவானது 6 நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் கலாநிதி ஷாஹித் அஹ்மத் ஹஷ்மத் இலங்கை மற்றும் பாகிஸ்தானிற்கிடையிலான இருதரப்பு உறவுகள் தெற்காசியாவில் சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையினை உருவாக்குவதன் நிமித்தம் பரஸ்பர நம்பிக்கை மற்றும் பொதுவான விருப்பிலேயே தங்கியுள்ளது என கருத்து தெரிவித்தார்.

இக்குழுவானது இலங்கையின் பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு படைகளின் பிரதானி, இலங்கை இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையின் தளபதிகள் போன்ற முக்கிய பிரமுகர்களை சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்குழு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான நிலையம் மற்றும் தேசிய பாதுகாப்பு கற்கைளுக்கான நிறுவனம் ஆகியவற்றிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு மேலதிகமாக பொலிஸ் குழு நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் முதற்கட்ட விசாரணைகளுக்காக மேலதிக பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் கடந்த 4 வருடங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளுக்காக இந்த ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் கோரிக்கைக்கு அமைய அறுவர் அடங்கிய பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் 18 உத்தியோகத்தர்கள் அடங்குகின்றனர்.

இதேவேளை, இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கு இணங்க, முதற்கட்ட விசாரணைகளுக்காக அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர், ஆணைக் குழுவில் அடுத்த சில வாரங்களுக்குள் முன்னிலையாகவுள்ளனர்.

அதேபோல், ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கமைய, 22 மற்றும் 23ஆம் திகதிகளில், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் இடம்பெற்றதாக கூறப்படும் ஔடத கொள்வனவு ஊழல் குறித்தும் விசாரிக்கப்படவுள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மொஹாலியில் பஞ்சாப் 'ஜாலி'

## 12 ஓட்டங்களில் வீழ்ந்தது ராஜஸ்தான்

ஐ.பி.எல்., தொடரில் ஐந்தாவது வெற்றியை பதிவு செய்தது பஞ்சாப் அணி. நேற்று நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தானை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஐ.பி. எல்., லீக் போட்டியில் பஞ்சாப் அணி 20 ஓவர் களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங் களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் அசத்திய லோகேஷ் ராகுல் அரைச்சதம் விளாசினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் தற்போது நடக்கிறது. மொகாலியில் நடந்த லீக் போட்டியில் தமிழக வீரர் அஷ்வினின் பஞ்சாப் அணி, ரகானே தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸை எதிர்கொண்டது.

பஞ்சாப் அணியில் அர்ஷ்தீப் சிங் அறிமுக வாய்ப்பு பெற்றார். ராஜஸ்தான் அணியில் ஸ்ரீவ் ஸ்மித் நீக்கப்பட்டு அஷ்டன் ரேர்னர் அறிமுகம் ஆனார்.

**கெய்ல் ஏமாற்றம்**

பஞ்சாப் அணிக்கு கிறிஸ் கெய்ல், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுத் தது. உனத்கட் வீசிய போட்டியின் 2ஆவது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர் அடித் தார் கெய்ல். அடுத்து குல்கர்னி பந்துகளை குறி வைத்து விளாசினார் கெய்ல். இவரது பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் கெய்ல் 30 ஓட்டங்களை எடுத்த போது, ஜோப்ரா ஆர்ச்சரிடம் சிக்கினார்.

ராகுலுடன் மயங்க் அகர்வால் இணைந் தார். இஷ் சோதி பந்தில் வந்த வேகத்தில் சிக்சர் அடித்தார் மயங்க் அகர்வால். தொடர் ந்த ஸ்ரேயாஸ் கோபால் பந்துகளில் ஓட்டமழை பொழிந்தார். 12 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்த மயங்க் அகர்வால், விரைவில் கிளம் பினார்.

**சுப்பர் ஜோடி**

அடுத்து ராகுல், மில்லர் ஜோடி சேர்ந்த னர். இருவரும் ராஜஸ்தான் பந்துவீச்சாளர் களை ஒரு கை பார்த்தனர். சோதி ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் அடித்து மிரட்ட, 14வது ஓவரில் 19 ஓட்டங்கள் எடுக்கப் பட்டன. உனத்கட் வீசிய போட்டியின் 15 ஆவது ஓவரிலும் இந்த விளாசல் தொடர, இம் முறை 20 ஓட்டங்கள் கிடைத்தன.

**'லக்கி' மில்லர்**

மில்லர் 32 ஓட்டங்கள் எடுத்த போது ஆர்ச்சர் பந்தில் போல்டானார். நல்லவேளை யாக இது 'நோ போல்' ஆக தப்பித்தார். மறுபக்கம் ஆர்ச்சர் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ராகுல், ஐ.பி.எல்., அரங்கில் 14 ஆவது அரைசதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 85 ஓட்டங்களைச் சேர்த்த போது ராகுல் (52 ஓட்., 47 பந்து) ஆட்ட மிழந்தார்.

19வது ஓவரை வீசிய ஆர்ச்சர், பஞ் சாப் அணிக்கு பெரும் தொல்லை கொடுத்தார். 3வது பந்தில் நிகோலஸ் பூரன் (5), 6வது பந்தில் மன்தீப் சிங்கை (0) அவுட்டாக்கி னார். மில்லர் 40 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். குல்கர்னி வீசிய கடைசி ஓவ ரில் அஷ்வின், ஒரு பவுண்டரி, 2 சிக்சர் அடித்தார்.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி 6 விக் கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைக் குவித்தது.

அஷ்வின் (17), முஜீப் (0) ஆட்டமிழக் காமல் இருந்தனர். ராஜஸ்தான் சார்பில் ஜோப்ரா ஆர்ச்சர் அதிகபட்சமாக 3 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்.

**திரிபாதி ஆறுதல்**

கடின இலக்கைத் துரத்திய ராஜஸ்தான் அணிக்கு பட்லர், திரிபாதி ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. பட்லர் 23 ஓட்டங் கள் எடுத்தார். சஞ்சு சாம்சன் 27 ஓட்டங் கள் எடுத்தபோது, அஷ்வின் சுழலில் போல் டானார்.

சற்று நிதானம் காட்டிய திரிபாதி (50), ஐ.பி.எல்., அரங்கில் 4ஆவது அரைச்சதம் எட்டினார். இவர் அஷ்வின் சுழலில் சிக்க, பஞ்சாப் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பியது. ரேர்னர் (0), முருகன் அஷ்வினிடம் சரிந்தார். ஷமியிடம், ஆர்ச்சர் (1) வீழ்ந்தார்.



அரைச்சதம் அடித்த பஞ்சாப்பின் லோகேஷ் ராகுல்

**1000**

ஐ.பி.எல்., அரங்கில் பஞ்சாப் அணிக்காக 1000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டி னார் லோகேஷ் ராகுல். 23 போட்டிகளில் இவர் 1,046 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் ஒரு சதம், 10 அரைசதங்கள் அடங்கும். தவிர, பஞ்சாப் அணிக்காக இந்த இலக்கை எட்டிய ஆறாவது வீரர் ஆனார். முதல் மூன்று இடங்களில் ஷோன் மார்ஷ் (2477), மில்லர் (1807), மக்ஸ்வெல் (1186) உள்ளனர்.

ரகானே (26) போராடியபோதும் வெற் றிக்கு போதவில்லை. கடைசி ஓவரில் வெற் றிக்கு 23 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஷமி வீசிய முதல் பந்தில் ஸ்ரேயாஸ் கோபால் (0) ஆட்டமிழந்தார். அடுத்த 5 பந்துகளில் 10 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன.

20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 12 ஓட்டங்களால் தோல்வி யடைந்தது. பின்னி (33) ஆட்டமிழக்காமல் இருந்தார்.




# சென்னையின் வெற்றி நடை தொடருமா?

## இன்று ஹைதராபாத்துடன் மோதல்

பிரிமியர் தொடரின் இன்றைய லீக் போட்டியில் சென்னை - ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன. இதில் வெல்லும் பட்சத்தில் சென்னை அணி 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறி அசத்தலாம்.

இந்தியாவில் பிரிமியர் தொடரின் 12வது சீசன் தற்போது நடக்கிறது. நடப்பு சம்பியன் சென்னை, மும்பை உட்பட 8 அணிகள் மோதுகின்றன. இன்று ஹைதராபாத்தில் நடக்கும் லீக் போட்டியில் தோனியின் சென்னை அணி, வில்லியம்சனின் ஹைத ராபாத்தை எதிர்கொள்கிறது.

30 வயதுக்கும் மேற்பட்ட 'சீனியர் கள்' அதிகம் உள்ள அணி என விமர்சிக்கப்பட் டது சென்னை அணி. இதற்கு கடந்த முறை கிண்ணம் வென்று பதிலடி கொடுத்தது. இம்முறையும் இதே விமர்சனம் எழுந்தது.

இருப்பினும் இதுவரை பங்கேற்ற 8 போட்டியில் 7ல் வென்று 'ரொப்' ஆக உள்ளது. வோட்சன் கோட்டை விட்டால் ரெய்னா, இவர்கள் ஏமாற்றினால் தோனி என அடுத்தடுத்து கைகொடுக்க அணியில் வீரர்கள் இருப்பது சென்னைக்கு பெரும் பலம். அதேநேரம் வோட்சன் இதுவரை ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை. டு பிளசி, கேதர் ஜாதவ், அம்பதி ராயுடு, பின் வரிசையில் ஜடேஜா துடுப்பாட்டத்தில் பலம் சேர்க்கின்றனர்.

**ஷர்துல் ஆறுதல்**

பந்துவீச்சில் தீபக் சகாருடன் (10 விக்.,) இணைந்த ஷர்துல் தாகூர், கொல்கத்தாவுக்கு எதிராக 'போர்முக்கு' திரும்பியது ஆறுதல் தருகிறது. இத்தொடரில் அதிக விக்கெட் சாய்த்தவர்களில் இரண்டாவது இடத்தில் உள்ள 40 வயதான இம்ரான் தாகிர் (13 விக்.,), ஜடேஜா (7) என 'சுழல்' கூட்டணி மீண்டும் சென்னைக்கு பலம் சேர்க்கும் என நம்பப்படுகிறது.

சென்னை தவிர, மற்ற ஆடுகளங்களில் சான்ட்னர் என்ற தோனியின் திட்டம் எடுபடு வதால் இன்றும் ஹர்பஜன் களமிறங்குவது சந்தேகம் தான்.

**வோர்னர் பலம்**

ஹைதராபாத் அணிக்கு ஆரம்ப ஜோடி வோர்னர் (400 ஓட்.,), பேர்ஸ்டோவ் (304), அடுத்து உலக கிண்ண அணியில் இடம்பெற்ற உற்சாகத்தில் உள்ள விஜய் சங்கர் (132) என மூன்று பேரைத் தான் பெரிதும் நம்பியுள்ளது. மற்ற துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றுகின்றனர்.

'நடுத்தர வரிசையில்' மணிஷ் பாண்டே (6 போட்டி, 54 ஓட்.,), தீபக் ஹூடா (6ல் 47), யூசுப் பதான் (6ல், 32) என மூவரும் முற்றிலும் சொதப்புகின்றனர். அணித் தலைவராக திரும்பியுள்ள வில்லியம்சனும் (14, 3) ஏமாற்ற, 'ஹட்ரிக்' தோல்வி அடைந்த சோகத்தில் உள்ளது.

**கலீல் எதிர்பார்ப்பு**

பந்துவீச்சில் புவனேஷ்வர், கலீல் அகமட் விக்கெட் வீழ்த்த தொடங்கியிருப்பது நல்ல விடயம். கடந்த 2018 சீசனில் 17 போட்டிகளில் 21 விக்கெட் சாய்த்த ரஷிட் கான், இம்முறை 7 போட்டிகளில் 6 விக்கெட்டுக்கள் மட்டும் சாய்த்தது அணிக்கு பெரும் பலவீனமாக உள்ளது.

**களமிறங்குவாரா தோனி?**

சென்னை அணித் தலைவர் தோனி, ராஜஸ்தான் அணிக்கு எதிராக 'சேஸ்' செய்த போது, முதுகுப்பகுதி பிடிப் பால் அவதிப்பட்டார். பின் களத்தில் செய்த சிகிச்சைக்குப் பின் மீண்டும் விளை யாடினார். அடுத்து கொல்கத்தா வுக்கு எதிராகவும் திணறினார். இதனால் ஹைதராபாத்துக்கு எதிராக களமிறங்கு வாரா அல்லது ஓய்வுஎடுப்பாரா என இன்று தெரியும்.




# 'நாயகன்' விவியன் ரிச்சர்ட்ஸ்



இரண்டாவது உலக கிண்ணத் தொடர் 1979ல் மீண்டும் இங்கிலாந்தில் நடந்தது. 'பி' பிரிவில் இடம்பெற்ற இந்திய அணி, லீக் சுற்றில் மே.தீவுகள், நியூசிலாந்து, இலங்கை யிடம் வரிசையாக தோல்வியடைய, அரை யிறுதி வாய்ப்பை இழந்தது.

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் 'நடப்பு சம்பியன்' மே.தீவுகள் அணி, இங்கி லாந்தை எதிர்கொண்டது. முதலில் துடுப் பாட்டம் செய்த மே.தீவுகள் அணி, கிரீனிட்ஜ், ஹெய்ன்ஸ், காளிச்சரண், அணித் தலைவர் கிளைவ் லொய்ட் உள்ளிட்ட 'டொப்ஓர்டர்' துடுப்பாட்ட வீரர்களை விரைவில் இழந்தது.

நான்கு விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்கள் மட்டும் எடுத்து திணறியது. இந்நிலையில் விவியன் ரிச்சர்ட்ஸ், ஒருநாள் போட்டியில் அதிரடியாக ஓட்டங் கள் சேர்த்து புரட்சியை ஏற்படுத் தினார்.

சதம் கடந்த இவர், 138 ஓட் டங்கள் (11 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) விளாசினார். மே. தீவுகள் அணி 60 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

பின் களமிறங்கிய இங்கி லாந்து அணியினர் ஏதோ டெஸ்ட் போல மந்தமாக ஆடினர். ஆரம்ப வீரர்களான மைக் பிரியார்லி (130 பந்து களில் 64 ஓட்.,), ஜெப்ரி போய்கொட் (105 பந்து களில், 57 ஓட்.,) நிதானமாக துடுப்பாட்டம் செய்தனர்.

இவர்கள் முதல் விக்கெட்டுக்காக 38 ஓவர்களில் 129 ஓட்டங்கள் எடுத்தபோதே, தோல்வி உறுதியானது. இறுதியில் இங்கி லாந்து அணி 60 ஓவரில் 194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதையடுத்து 92 ஓட்டங்கள் வித்தியாசத் தில் அபார வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி, கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது.

அந்த கால கட்டத்தில் தொடர் நாயகன் விருது இல்லை. ஆட்ட நாயகன் விருதை ரிச்சர்ட்ஸ் தட்டிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் நுவரெலியாவில்

(கொழும்பு)

நுவரெலியாவிற்கு மூன்று நாட்கள் சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை நுவரெலியா பம்பரகலை பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.



விஜயம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்குள்ள பம்பரக்கலை ஸ்ரீமகா விகாரையில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்டு, நாட்டிற்கும் நாட்டின் மக்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

அத்தோடு, நுவரெலியா பம்பரக்கலை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை குறித்து விகாரையின் விகாராதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததையடுத்து, இதனை கவனத்திற்கொண்ட பிரதமர், இதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

விகாராதிபதி மீபனாவே சுகந்தநந்த தலைமையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வில், நுவரெலியா மாநகர சபை மேயர் சந்தனலால் கருணாரத்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (7)

# சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியவர்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சந்தேகத்துக்கு இட மான முறையில் நடமாடிய 4 பேர் காங்கேசன்துறைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 3 கத்திகளும், கைக்கோடரி ஒன்றும், ஸ்குரு ரைவர், சுத்தியல் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாகக் கூடி நின்றவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். அதன்போதே அவர்களிடம் இருந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களிடம் இருந்து 19 ஆயிரத்து 500 ரூபா மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் மாலை முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, கீரிமலைப் பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் நேற்று உண்டியல் உடைத்துத் திருட்டு நடைபெற்றுள்ளது. (5-101)

# சனசமூக நிலையம் மீள ஆரம்பம்



ஆனைக்கோட்டை உதயதாரகை சனசமூக நிலையம் 15 ஆண்டுகளின் பின் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. ஜே/ 132 கிராம மக்களின் அயராத முயற்சியினால் கடந்த 14 ஆம் திகதி புத்தாண்டு அன்று மீண்டும் புத்துயிர் பெற்றது. (10)

# கட்டடத் திறப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ சுப்ரமணிய சனசமூக நிலைய புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நிலைய மண்டபத்தில் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நீர்வேலி மேற்கு கிராம உத்தியோகத்தர் க.உ.கேந்திரன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இ.செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (5-134)

# இளைஞன் பலி!

கொலன்ன, கஸ்தானகஹவத்த பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்விற்கு செல்வதற்காக தயாராக இருந்த இருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது பலத்த காயமடைந்த இளைஞன் கொலன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான். (7)

# நெல் கொள்வனவும் களஞ்சியப்படுத்தலும் இன்று தொடக்கம் ஒரு மாத காலத்திற்கு

நெல் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகள் இன்று முதல் ஒரு மாத காலத்திற்கு விரிவாக முன்னெடுக்கப்படும் என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க தெரிவித்தார்.

இந்த மாதத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெற்தொகைகள் உரிய முறையில் களஞ்சியப்படுத்தப்படும். இவற்றைக் களஞ்சியப்படுத்தவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 5 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்தார். அம்பாறையில் ஆகக் கூடுதலான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நெல் களஞ்சியசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்றும் சபையின் தலைவர் கஸ்தூரி அனுராதநாயக்க மேலும் தெரிவித்தார். (7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் கனகரத்தினம் தம்பாபிள்ளை

(ஓய்வு பெற்ற உப அதிபர், தி/ சென். ஜோசப் கல்லூரி, யா/ விக்டோரியாக் கல்லூரி, தலைவர் கல்வளை முதியோர் பகல் பராமரிப்பு நிலையம்)



மண்ணில் 11 04 1927

விண்ணில் 16 03 2019

உங்கள் புன்னகை முகம்- எம் மனதை விட்டு அகலவில்லை
நிழலாய் தொடரும் உங்கள் நினைவுகளை மறக்க முடியவில்லை
காலங்கள் பல கடந்து சென்றாலும் உங்கள் சேவைக்கு அழிவில்லை.

(8486)

நவமஹால் கல்வளை. சண்டிலிப்பாய்.

உங்கள் பிரிவினால் துடிக்கும் மகள்மார். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.


# இராசி பலன்

**மீனம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மேடம்:** தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தேக நலனில் கவனம் தேவை.

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | சூரி | செவ் | ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி. | | |
| | | | |
| சனி, குரு, கேது | | | சந் |

17.04.2019

சித்திரை 04, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 9.09 மணிவரை

உத்தரம் முன்னிரவு 10.25 மணிவரை

சுபநேரம் 4.34- 6.04 மணிவரை

இராகுகாலம் 12.04- 1.34 மணிவரை

பிரதோச விரதம்,

அமிர்தசித்தம்.

வளவன்

**கடகம்:** ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம திருப்திதரும்.

**மகரம்:** உங்கள் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிம்மம்:** உறவினரின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை கூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றத்தில் புதிய இசை வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நுண்கலை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புக்களுள் இசை வகுப்புக்களின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன.

அனுபவம் வாய்ந்த இசை ஆசிரியரினால் கற்பிக்கப்படும் கர்நாடக இசை வகுப்புக்கள் வட இலங்கை சங்கீத சபையினரின் பாடத் திட்டத்திற்கு அமைவாக தரம் 1 முதல் தரம் 6 வரையான மாணவர்களுக்கு கற்பிக்கப்படும்.

சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும்.

கர்நாடக இசை வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வயலின், மிருதங்கம், நடனம் முதலிய வகுப்புக்களும் இங்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-102)




மகிழ்ச்சியாக வாழுவோம் மகிழ்ச்சியாக வாழ வைப்போம் எனும் தொனிப் பொருளில் வாராந்தம் உதவி வழங்கும் திட்டத்தினூடாக அண்மையில் தெல்லிப்பழை செஞ்சோலை ஞான வைரவர் ஆலய பிரதேசத்தை சேர்ந்த இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு பரீட்சை அப்பியாச புத்தகங்களும் கொப்பிகளும் எழுதுகருவிகளும் வழங்கப்பட்டன.

## ஈஸ்ரர் சந்தை

(யாழ்ப்பாணம்)

கிறீன்பீல்ட் சனசமூக நிலையம் நடத்தும் ஈஸ்ரர் சந்தை எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிமுதல் கிறீன்பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் விசன்கெயர் நிறுவனத்தினரால் இலவச கண் மற்றும் காதுப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும் என கிறீன் பீல்ட் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (5)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

"திருவாசகம் என்னும் தேன்" அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று 17 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணியளவில் இணுவில் அறிவாலய கலாநிதி ஆறு.திருமுருகன் மண்டபத்தில் (இணுவில் கந்தசுவாமி கோவிலடி) பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும். (5)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் புலோலி மாவடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகசிவம் அரவிந்தன் வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் பணிபுரியும் இவர் கோப்பாய் பிரதேச தேசோதய சபை இலங்கை நெஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு பிரிவு உறுப்பினரும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார். (5-134)

## அறிவொளி சனசமூக நிலையத்தின் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அரசடி ஞான வைரவர் சுவாமி திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு அறிவொளி சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கில் சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலை மையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலன், சிறப்பு விருந்தினராக கிளி/தருமபுரம் கல்லாறு தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் ம.சியாமளா, ஜே/88 புதிய சோனகதெரு கிராம உத்தியோகத்தர் திருமதி.சோ.பகீரதன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.சுபைதா, யாழ். மாநகர சபை உறுப்பினர் எம்.எம்.எம்.நிபாஹிர், சமூகப் பற்றாளர் ச.பால சுப்பிரமணியம், யாழ்.பிரதேச செயலக இந்து சமய கலாசார உத்தியோகத்தர் திருமதி.லி.சுபேந்தினி ஆகியோர் கலந்து கொள்வர். (5-7)

## பிரதேச சபையின் அசமந்தப் போக்கால் வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

(கரணவாய்)

வீதி விளக்குகள் ஒளிராமல் இருக்கிற நிலையில் அது குறித்து பிரதேச சபைக்கு தெரியப்படுத்தியும் பிரதேச சபையின் மின்னிணைப்பாளர் அது குறித்து அக்கறை செலுத்தாதுள்ளதாக பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையால் வீதி விளக்குகள் பெருத்தப்பட்டுள்ளன.

அவற்றில் சில பழுதடைந்து ஒளிராமல் உள்ளன. சில மின் விளக்குகள் இரவு-பகலாக ஒளிர்ந்த வண்ணம் காணப்படுகின்றன.

இவ்வாறு ஒளிராமல் உள்ள வீதி விளக்குகளை சீர் செய்ய வேண்டியது பருத்தித்துறை பிரதேச சபையின் கடமையாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (5-60)

## 1.1 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் வாழைச்செய்கை ஊக்குவிப்புத் திட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலம் வாழைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு ஏறக்குறைய 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட விவசாயத் துறையை ஊக்குவிப்பதற்கும் புதிய தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் இளைய வளர்ப்பு வாழைக் குட்டிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஊர்காவற்றுறை, உடுவில், தெல்லிப்பழை, சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 20 பயனாளிகள் இத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் இளைய வளர்ப்பு வாழைக்குட்டிகள் வழங்கப்படுவதுடன் 75 வீத மானிய அடிப்படையில் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதியும் அதற்கான நீர்த் தாங்கியும் வழங்கப்படவுள்ளது.

ஆகவே இத் திட்டத்தில் இணைந்து கொள்ளவிரும்பும் பயனாளிகள் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (5)





உரும்பிராய் இந்துக்கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு வைபவமும் நூற்றாண்டு விழா மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.அருணந்தி சிவம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை ஆசிரியை திருமதி.கௌரி சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் த.பாலராஜ், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஸ்தாபகர் நினைவுப்பேருரையை விரிவுரையாளர் சி.ரமணராஜாவும் ஆய்வுரையை கலாநிதி இ.ஜெயந்திரனும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதிக்கு பயணமானார் ஜனாதிபதி



(கொழும்பு)

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தூதுக்குழு. இந்தியா-ஐதராபாத்துக்கு சென்றுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.177 விமானத்திலேயே இக்குழு. நேற்றுக்காலை 7.40 இற்கு கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த விஜயத்தின் போது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. திருப்பதியில் வழிபாடுகளில் ஈடுபடுவார் என அறிய முடிகின்றது. (7)

# 5 எல்.என்.ஜி.மின் நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் மின்சார பிரச்சினைக்கு தீர்வை காணும்வகையில் ஐந்து எல்.என்.ஜீ. மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது..

நாட்டின் மொத்த மின்சார தேவையில் 50 சதவீதமான பகுதியை 2030 ஆம் ஆண்டளவில் புதுபிக்கக் கூடிய வலுசக்தி மூலங்களிருந்து பெற்றுக்கொள்ள அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை நாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்தாலும் மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்திருக்கும் நீரேந்து பிரதேசங்களில் மழை பெய்யவில்லை என மின்வலு அமைச்சு அறிவித்துள்ளது. நீரேந்து பிரதேசங்களின் நீர் மட்டம் தற்சமயம் 30 சதவீதமாக காணப்படுகிறது. பண்டிகைக் காலத்தில் மின்சார தேவை அதிகரித்திருந்தாலும் நீர் மின்நிலையங்களிலிருந்து போதியளவிலான மின்சாரம் வழங்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை முதல் மின்சார துண்டிப்பு இடைநிறுத்தப்பட்டாலும் மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்ந்தும் சவாலாகவே காணப்படுவதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (7)


# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 01 | YA/CWP /RE/ 2019-07 | Construction of a semi-permanent building for Canteen at Kondavil Hostel, University of Jaffna. | 6.7 | 120 | C7 or above | Rs.65,000.00 |
| 02 | YA/CWP/ RE/ 2019-08 | Improvement of Management Faculty Canteen and other related services at Faculty of Management Studies, University of Jaffna. | 17.8 | 120 | C6 or above | Rs. 175,000.00 |
| 03 | YA/CWP/ RE/ 2019-09 | Improvement of new exam hall ground floor (Air-conditioning work), Faculty of Arts, University of Jaffna. | 6.8 | 60 | C7 or above / Business Registration | Rs. 65,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table. The bidders who have valid business registration will also be eligible for work No.3
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs**. Contact numbers are: **Phone: 021 221 9201 Fax: 021 221 9201.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** from**17th April 2019 until 2nd May 2019** from **9:00 hrs to 15:00hrs** and upon payment of a non-refundable fee of **Rupees Two thousand Five hundred (Rs.2500/-) for each bids No 1 & 3 and Rupees Three thousand and Five hundred (Rs.3500/-) for bid No 2.**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch** to reach on or before **10.00 hrs on 03rd May 2019.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on 03rd May 2019** at the Board Room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid atleast for a period of **90 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning, University of Jaffna at 10.00 hrs on the 26th April, 2019.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna.

(C-6141)


# சிகரெட்டுடன் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கை பயணிகள் இருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். டுபாயில் இருந்து சட்டவிரோதமாக சிகரெட் தொகை ஒன்றை இலங்கைக்குக் கொண்டு வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் 27 வயதான பெண் என தெரியவந்துள்ளது. அவரிடமிருந்து 43,480 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் கைது செய்யப்பட்ட 25 வயது இளைஞனிடம் இருந்து 39,900 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 41 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (7)

# சுபவேளையில் மரக்கன்றை நாட்டிய ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)



நேற்று முன் தினம் முற்பகல் 11.17 மணிநேர சுபவேளையில் ஜனாதிபதியின் இல்ல வளாகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோக பூர்வ பழ மரக்கன்றொன்றை நாட்டினார்.

முக்கொத்துசுபவேளையான நேற்று முன்தினம் முற்பகல் 11.17 மணிக்கு வெண்ணிற ஆடையில் கிழக்குத் திசையை நோக்கி மரக்கன்றொன்றை நடுவது இம்முறை சிங்கள. தமிழ் புத்தாண்டு பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

எதிர்கால தலைமுறைக்காக் சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகம் உணரப்படும் இக்காலத்தில், அந்த பாரம்பரியத்துடன் இணைந்து பிரஜை என்ற தமது பொறுப்பை நிறைவேற்றுமாறு புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி அனைத்து இலங்கையர்களிடமும் கேட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (7)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பீடம் அறிவியல் நகர், கிளிநொச்சி

**முதலாம் வருட 2016/17 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட முதலாம் வருட 2016/17 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 29.04.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன். விடுதி வசதிகள் 28.04.2019 இல் இருந்து வழங்கப்படும்.

பதிவாளர் (C-6139)



## JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT

IELTS Academic + General
IELTS Life Skills

**Cambridge English Courses**
- Cambridge Preliminary Test (PET) (B1)
- Cambridge First Certificate in English (FCE) (B2)
- Cambridge Advanced English (CAE) (C1)

University of Cambridge Certificate வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தக்கூடியவை. Cambridge English Qualification Registration Centre for the British Council.

- 2004 ஆம் ஆண்டு எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை சுமார் 5000 மாணவர்கள் IELTS இல் சித்தியடைந்து UK, Australia, Canada, USA போன்ற நாடுகளில் நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.
- A1, பரீட்சையில் சுமார் 750 இற்கு மேல் City & Guilds மற்றும் IELTS - Life Skills பரீட்சையில் நமது நாட்டு இல்லத்தரிசிகள் சித்தியடைந்து UK ல் வசித்து வருகின்றனர்.

வகுப்புக்கள் நடைபெறும் இடம்

NO.464, Hospital Road, Jaffna. 075 261 3659 077 880 3887

(C-8140)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# இளவேனிற்காலத்தில் மலர்களும் மருத்துவக் குணங்களும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இளவேனிற்காலமாகிய சித்திரை, வைகாசியில் பூக்கள் மலர்கின்றன. பலபல வர்ணங்களில் பொதுவாக மருத்துவ குணங்கள் நிறைந்த தாழை, சண்பகம், வில்வம், மகிழ், புன்னை போன்ற பற்பல வகையான மலர்கள் மலரும்.



பின்பனிக்காலத்தில் தன்னிலை மிகுதிபெற்ற கோழை




(கபம்), இளவேனிக்காலத்தில் சூரிய வெப்பத்தால் தன்னிலை பிறழ்ந்து மிகவும் அவதிப்படுவது இயல்பு. இக் கபத்தின் அதிகரிப்பு பசித் தீயை கெடுத்து பற்பல கபப்பிணிகளை விளை விக்கும்

தன்னிலை பிறழ்ந்து மிகுந்துள்ள கோழையை வெப்ப வீரியமுள்ள வாந்தி, நசியங்களால் தன்னிலைப்படுத்துவதுடன் இனிப்பு, புளிப்பு, உப்பு, குழகுழப்பு, வழுவழுப்பு, குளிர்ச்சி இவைகளுள்ள பொருட்களையும் பகல் தூக்கம், இராக்கண் விழித்தல் இவை போன்றவற்றையும் நீக்கி அற்ப வெப்புமுள்ள உணவுகள், மணப்பூச்சுக்கள் பூசியும், வெப்பத்தை தணிக்கும் இயற்கை இடங்களிலும் வாழவேண்டுமென இப்பருவகாலம் எடுத்துரைக்கின்றது.

இயற்கை இப்பருவ காலத்தில் மலரும் மருந்து மலர்களின்பண்புகளையும்நோக்கில்,

**• சரக்கொன்றை/ கொண்டல்பூ**



கொண்டல் பூக்களை தேசிப்புளிச்சாறு சேர்த்து அரைத்து உடம்பில் தேய்த்துக் குளிக்க தேமல், சொரி, கரப்பான் உடல் வெப்பம் தணியும்.

ஒரு கைப்பிடியளவு இப் பூக்களை எடுத்து கீழ்க்காய் நெல்லி சாற்றுடன் மைபோல அரைத்து 5 கிராம் அளவு உருட்டி காலை 3 கிழமைகள் சாப்பிட்டு வர இரத்தக் குறைவுதீரும்.

கொன்றைப்பூக்களையும் கொழுந்துகளைம் தேனுடன் சேர்த்து அரைத்து 5 gm 200 மில்லி பாலில் கலக்கிக் கொடுக்க வெள்ளை சாய்தல் நீங்கும். அத்துடன் உள்உறுப்புக்களை வன்மைப்படுத்தி மெலிந்தோருக்குமிகுந்த பலத்தையும்கொடுக்கும்.

**• இலுப்பைப்பூ**

சீனிப்பாகில் பூக்களைச் சேர்ந்து உருண்டை செய்து சாப்பிட உடல் வன்மை அடையும். ஒரு கைப்பிடியளவு இலுப்பைப் பூக்களை ஒரு லீற்றர் நீர் விட்டு அரைவாசி சுண்டும்வரை கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி அரைவாசியாய் பிரித்து காலை, மாலை அருந்த நாட்பட்ட இருமல் தணியும். இலுப்பைப்பூக்களில் கல்சியம், பொசுபரஸ் சத்துக்களும் காணப்படுகின்றன. இளவேனிற்காலத்தில் இலுப்பைப் பூக்களை சேகரித்து இனிப்பாகவோ காரமாகவோ துவைத்து சாப்பிட்டு மேற்கூறிய பலன்களைப் பெற முடியும்.

**• மகிழம்பூ**

இப்பூக்களை காயவைத்து இடித்து துணியில் மிக மெல்லிய அளவில் கலந்து வைத்துக்கொண்டு மூக்குப்பொடி போல் உபயோகித்துவர பீனிசம்/நீர்க்கோவை தீரும்.


பூக்களை குளிர்ந்த நீர்ஊறல் குடிநீர் அல்லது குடிநீராக காய்ச்சி 30-60 மில்லி எடுக்க உடல் அனல் தணியும். உடல் வன்மை பெறும்.

**• வில்வம்பூ**

வில்வம் பூக்களை குடி நீரிட்டேனும் உலர்த்தி பொடித்தேனும் உடல் உஷ்ணத்தை தணிக்க தேயிலைப்பொடி போல் பயன்படுத்தலாம். பொடியை ஒரு கிராம் பயன்படுத்தலாம். குடிநீர் 80 மில்லி வரை அருந்தலாம்.

**• வாழைப்பூ**

வெப்பகாலத்திற்கு உகந்த பூ. உடல்கொதிப்பு, மூலச்சூடு, மூலரோகம், பெரும்பாடு (மாதவிடாய்க் காலத்து அதிக இரத்தப்பெருக்கு) ஆகியன நீங்கும்.



இதன் பூக்களை (இளம் பூக்கள் சிறந்தது) புட்புட்டுச் சாறு எடுத்து பனங்கற்கண்டு சேர்த்து பயன்படுத்த மேற்கூறிய பயன்களைத் தரும். வாழைப் பொத்தி வறை வாரத்தில் 3 நாட்கள் பயன்படுத்தலாம்.

**• பூவரசம்பூ**

இப்பூக்களை நன்கு கழுவி அரைத்து சொறி, சிரங்கிற்கு பூசலாம்.

**• புங்கம் பூ**

இதன் பூக்களுடன் நல்லெண்ணெய் சேர்த்து தைலம் தயாரித்து பூச கரப்பன், படை ஆகியவை நீங்கும்.

**• வேப்பம் பூ**

இதன் பூக்களை இரசம் வைத்துக் குடித்தால் நோய்கள் உடலை அணுகாது.

ஒரு கைப்பிடி வேப்பம் பூக்களுடன் மிளகு சேர்த்து மை போல அரைத்து 2 கிராம் அளவு உருட்டி விழுங்கக் கொடுத்தால் குடற்புழுக்கள் அழியும்.

**• செவ்வரத்தம்பூ**

இதன்பூக்களைபச்சடிசெய்து சாப்பிட்டால் உடல் உஷ்ணத்தை தணிக்கும். அல்லது பூவிதழ்களின் குளிர்ந்த நீர் ஊறல் குடிநீராக தினமும் காலையில் 100 மில்லி குடித்துவரலாம்.

செம்பருத்தி பூக்களில் சாறு எடுத்து சமஅளவு தேங்காய்



எண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயாக காய்ச்சி முடிக்கு தேய்த்துவர முடி கருமை நிறமாக மாறும்.

**• தேன்கொடுக்கு பூ**

ஒரு பங்கு பூவிற்கு 4 பங்கு நீர் விட்டுக் காய்ச்சி குடிநீராக்கி வாய் கொப்பளித்துவர தொண்டைப்புண், தொண்டையில் காணும் வலி ஆகியன நீங்கும்.

**• மந்தாரைப்பூ**

இது ஓர் அற்ப மூலிகையாகும். இதன் பூக்களை சேகரித்து, உலர்த்தி, பொடித்து 2 கிராம் அளவிறகு சர்க்கரை சேர்த்து காலை, மாலை சாப்பிட கழியச்செய்யும். இரத்தக் குறைவும் நீங்கும். கண்ணிற்கு குளிர்ச்சியை தரக்கூடிய சில எண்ணெய்களில் இதுசேரும்.

**• மாதுளம் பூ**

மாதுளம்பூ,. கசகசா, ஏலம், சீரகம் சம அளவு எடுத்து பொடித்து 2 கிராம் காலை, மாலை தேனில் உட்கொள்ள வயிற்றுப்போக்கு தீரும்.

மாம்பூ, மாதுளம்பூ, வாழைப்பூ மூன்றையும் சமஅளவு எடுத்து உப்பு, புளி, மிளகாய், பூண்டு, இஞ்சி, காயம் சேர்த்து அரைத்து துவையல் செய்து சாப்பிட்டால் அதிக இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தும்.

மாதுளம்பூச்சாற்றில் அதிமதுரம் 5 கிராம் அரைத்துச் சாப்பிட்டால் மூலக் கடுப்பு, மூலச் சூடு குணமாகும்.

**• அகத்திப்பூ**

முட்டை பொரித்து சாப்பிடும் போது அகத்திப்பூக்களையும் சேர்த்து பொடித்து சாப்பிட்டால் கொழுப்பு குறையும் உடல் உஷ்ணம் தணியும்.

அகத்திப்பூக்களை பாலில் இட்டு கொதிக்க வைத்து உண்ண உடற்சூடு தணியும். இதன் பூக்களின் சாற்றுடன் தேன் கலந்து உண்ண இருமல் தணியும். மார்புச்சளி குணமாகும்.

இதன் பூக்களை சமைத்துண்ண வெயிலாதிகளால் உடலிலெழும்பித்தத்தைத்தணிக்கும்.

**• புன்னைப்பூ**

இதன் பூக்களை தண்ணீ



ரில் ஊறப்போட்டு, அந்நீரைக் கொண்டு கண்களை கழுவிவர கண்வீக்கம், சொறி, சிரங்கு நீங்கும்.

இதன் பூக்களை உலர்த்தி பொடித்து ஒரு கிராம் தேனுடன் கூட்டி வாத, பித்த, கபப் பிணிகளுக்கு கொடுக்கலாம்.

**• களாப்பூ**

இதன் பூக்கள் கண்களில் பூவிழுதலிற்கு சிறந்த மூலிகை. இப்பூவை கசக்கி கண்ணில் விடியற்காலையில் மூன்று துளி விட்டுவர கண்களில் பூவிழுந்திருந்தால் அவைகளை போக்கும். “நாரி கேளாஞ்சனம்” என்கிறமையில் இது ஓர் முக்கிய சரக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடியால் தாக்கப்பட்டு இளைஞன் உயிரிழப்பு

இபலோகம - சேனபுர பிரதேச வீடு ஒன்றில் சில நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை தொடர்ந்த மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் தடி ஒன்றினால் தாக்கிக் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெல்லவ - கிகதெனுபொன பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.(7)

# இருவரிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தில் வாள்வெட்டிற்கு இலக்காகி ஒருவர் பலி

(திருமலை)

திருகோணமலை-துறைமுக காவற்றுறை பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் வால் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை-நீதிமன்ற வீதி,வில்லூன்றி பகுதியைச் சேர்ந்த தங்கத்துரை தனுஸ்டன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். யுவதி ஒருவரை இருவரும் காதலித்து வந்த நிலையில் காதல் விவகாரத்தில் ஏற்பட்ட வாக்குவாதமே இதற்குக் காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

கடற்படை முகாமை அண்மித்த பகுதியில் வாளால் வெட்டியதாக கூறப்படும் சந்தேக நபர் வெட்டி விட்டு தப்பி சென்றுள்ள நிலையில், பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் படுகாயங்களுக்கு உள்ளான சந்தேகநபரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.(7)

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(மஹியங்கனை)

மஹியங்கனை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் உஹனை யிலிருந்து கண்டி நோக்கிப் பயணம் செய்கையில் குறித்த மோட்டார் சைக்கிளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பயணித்துள்ள நிலையில் அதில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகி யுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மோட்டார் சைக்கிளை வீதியோரம் நிறுத்த முற்பட்ட வேளையில் பின்னாலிருந்து வந்த மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோதியமையால் குறித்த விபத்து நேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 38 ½ சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Postman
எதிர்பார்ப்பு: சாதாரணதர அரச, தனியார் தொழில், உள்நாடு
தொ.இ: B/9593

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 46 ½ செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc ,Civil Engineer, Singapore
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, QS, Dentist, Veterinary Doctor. உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9594

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: சூரி செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் A/L,HNDA. சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: உள்நாடு.
தொ.இ: B/9595

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி உயரம்: 5'4"
தகைமை/தொழில்A/L,சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.
தொ.இ: B/9596

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 30 ¼
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA,MA,சமூகவியலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,Accountant, Engineer, வங்கி, அரசசார்பற்ற நிறுவனம்
தொ.இ: G/3990

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: 43 செவ் 4 இல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்:BA,MA,M.Ed, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்,வேறு தொழிலும் விரும்பத்தக்கது. உள்நாடு
தொ.இ: G/4018

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 38 செவ் 12 இல்
உயரம்: 5'4'
தகைமை/தொழில்:CIMA, BCSAss. General Manager
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Bank Accountant, உள்நாடு
தொ.இ: G/4056

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 12 ½
உயரம்: 150cm
தகைமை/தொழில்HNDA,AAT, வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்/வெளிநாடு
தொ.இ: G/4058

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# குறை'களை' பதிகம் 39

## பாலூட்டும் தாய்மார்க்கு பேருந்தில் இடம் வேண்டும்

இயந்திரத்தைக் காலில் கட்டி
ஓடும் உலகத்தில்
எங்கும் மாற்றம் எதிலும் புதுமை

உணவு நஞ்சாகிட
நஞ்சை தினம் உண்டு உண்டு
உருண்டு கொண்டு இருக்கிறது மனிதம்

மாற்றம் ஒன்றே மாறாதது-இருந்தும்
மாறாத ஒன்று உண்டெனில்
அது அன்னை அன்பொன்றே!

அண்மையில் தூர இடம் செல்லும்
பேருந்தில் ஏறி உட்கார்ந்தேன்
நீண்ட நாளின் பின்னான பயணமது
சுகமான சுகம், பழைய நினைவுகள்
பசுமையாய் ஓடிக்கொண்டிருந்தன

"அண்ணை கொஞ்சம் விடுவீங்களா?"
இளம் தாயவளின் குரல்
செல்லச் சிரிப்புடன்
அவள் தோளைப் பற்றியிருந்தாள்
சின்னச் சிட்டொருத்தி
எழுந்து இடம் விட்டுவிட்டு
அருகில் இருந்தேன்

என் மிகுதி நேரம்
மழலையின் செல்ல மொழியில்
புரண்டோடிக் கொண்டிருந்தது

சிரித்துக்கொண்டிருந்த
சின்னச்சிட்டு அழத் தொடங்கினாள்
பசி என்று அன்னை அறிந்து கொண்டாள்
அருகிலிருந்த நானும் அதை உணர்ந்தேன்

பசிக்கழும் குழந்தைக்கு
பால் கொடுத்துப் பசியாற்ற
பலர் நிறைந்த பேருந்தில்
தவித்தாள் அந்த இளம் தாய்

அழும் குழந்தை அழுகை நிறுத்தவில்லை
துடித்துப் போனாள் தாயவள்
கிடைத்த ஒரு சிறு துண்டை
மறைப்பாய்க் கொண்டு பசியாற்றினாள்
சிரித்தெழுந்து துள்ளிக் குதித்தது குழந்தை

சிறுத்த அந்த பேருந்தில்
தாயன்பு இமயமாய் உயர்ந்து நின்றது

வட பிராந்திய போர்க்குவரத்து
சாலை முகாமையாளரே
தனியார் பேருந்து சங்கங்களே
தூர இடம் செல்லும் பேருந்துகளில்
பாலூட்டும் தாய்மார்க்கென்று
இடமொன்று ஒதுக்குவீர்

ஆரோக்கியமான அன்பான
சமூகத்தை உருவாக்க உதவுவீர்
இது நடந்தால் உமை
இந்த உலகம் உயர்விக்கும்.

மாவை.நா.கஜேந்திரன்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2019-14.05.2019



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் ராகு பகவான் சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் கேதுவோடு சனி, குரு ஆகிய இரண்டு கிரகங்களும் சேர்ந்திருக்கின்றன. இதில் குரு பகவான் அதிசார கதியில் தனுசு இராசியில் வீற்றிருந்தபடி உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே உங்கள் குண நலன்களில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும்.

இதுவரை சந்தித்து வந்த துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்கும். மறைமுக வருமானங்கள் வந்து மகிழ்ச்சியை வழங்கும். இரவு-பகலாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் உங்களுக்கு கிடைக்கப் போகிறது. உறவினர் பகை அகலும். உடல் ஆரோக்கியம் சீராகும். நீண்ட நாட்களாகத் திட்டமிட்ட காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். நிகழ் காலத்தேவைகள் அனைத்தும் எளிதில் பூர்த்தியாகும். பொருளாதார நிலை திருப்தி தரும்.

உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். 'கேந்திராதிபத்ய தோசம் பெற்ற கிரகங்கள் நீச்சம் பெற்றிருந்தால், மிகுந்த நன்மை தரும்' என்பது ஜோதிட நியதி. அந்த அடிப்படையில் 10 இல் சஞ்சரிக்கும் புதனின் பலத்தால், அரசாங்க உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கலாம். உயர்ந்த நிலையில் இருக்கும் மனிதர்களின் ஒத்துழைப்போடு இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

ஜென்மத்தில் இருக்கும் ராகுவும் சப்தம ஸ்தானத்தில் இருக்கும் கேதுவும் நன்மைகளை செய்ய, நாகசாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது. வாழ்க்கைத் துணையோடு அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப் பளு கூடும்.

சனி, உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது உங்களின் உழைப்பும் அதிகரிக்கும். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், அந்த உழைப்புக்கான பலன் நிச்சயம் வந்து சேரும். பார்க்கும் குருவை பலப்படுத்த வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து குரு பகவானை வழிபடுங்கள்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி வருகிறது. அன்றைய தினம் சித்ரகுப்தனை வழிபடுவதோடு, வராக ஜெயந்தி அன்று, விஷ்ணுவையும் வழிபட்டால் வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி அகலும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்!**

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். அங்குள்ள புதனோடு இணைந்து புத-சுக்கிர யோகமும் நீச்சபங்க இராஜயோகமும் செல்கிறார். விரயாதிபதி சுக்கிரன், இலாப ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டே இருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் முடிக்கும் ஆற்றல் பிறக்கும். ஆகையால் இந்த காலகட்டத்தில் துணிந்து சில காரியங்களை செய்து வெற்றிபெறுவீர்கள்.

**பொன்னான புதன் சஞ்சாரம்**

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசிக்குப் புதன் செல்கிறார். இது உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். இராசிநாதன் இலாப ஸ்தான




த்தில் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். 'வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா?' என்று சிந்திப்பீர்கள். மே 12 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். இராசிநாதன் 12 இல் சஞ்சரிக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உத்தியோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

**மிதுன செவ்வாய் சஞ்சாரம்!**

மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவரை சப்தம பார்வையாக சனி பார்க்கிறார். குருவின் பார்வையும் செவ்வாய் மீது பதிகிறது. இதனால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் தாமதமாகலாம். உடன் பிறப்புகளின் மூலம் உதவி கிடைப்பது அரிது. சொத்துக்களால் சில சிக்கல்கள் உருவாகும். இந்தக் காலகட்டத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் அவசியம். அடுத்தவர் விடயங்களில் தேவையில்லாமல் தலையிட வேண்டாம். ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையை செலவழிக்க வேண்டியதிருக்கும்.

இந்த மாதம் செவ்வாய்க்கிழமை அங்காரகனையும் சனிக்கிழமை விநாயகர் மற்றும் அனுமனையும் வழிபடுங்கள். அதோடு வியாழக்கிழமை குருவையும் சித்ரா பௌர்ணமி அன்று சித்ரகுப்தனையும் வழிபட்டால் வெற்றி நிச்சயம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இந்த மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் தீரும். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய, கொஞ்சம் கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் பாசமும் நேசமும் கூடும். பொது நலத்தில் இருப்பவர்களுக்குத் திடீரென நல்ல பொறுப்புகள் வந்து சேரலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வூாகனங்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் வாய்க்கும். அதற்கு குடும்ப உறுப்பினர்களும் சம்மதம் தெரிவிப்பர். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்புக் கிடைக்கும். வராகர் ஜெயந்தியன்று விஷ்ணுவை வழிபட்டு வருவது நல்லது.

## சப்தம குருவால் சந்தோசம் பெருகும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் சந்திரன் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதி சூரியன் உச்சம் பெற்று விளங்குகிறார். யோகாதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். குருபகவான் 6 ஆம் இடத்தில் அதிசாரமாக அமர்ந்து உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வியாபார விரோதங்கள் அகலும். வீடு, இடம் வாங்க வேண்டும், கட்டிய வீட்டை பழுது பார்க்க வேண்டும் என்ற உங்களது எண்ணம் நிறைவேறப் போகிறது.

உங்கள் இராசிக்கு 6 இல் கேதுவும் 12 இல் ராகுவும் மாதம் முழுவதும் சஞ்சரிக்கப் போகிறார்கள். எனவே பயணங்களும் அலைச்சலும் அதிகரிக்கும். ஆகாரத்தில் அக்கறை செலுத்த இயலாது. எனவே சிறுசிறு உடல் பாதிப்புகள் வரலாம்.

தன ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், இதுவரை கவலை அடையச் செய்து வந்த கடன் பிரச்சினை நிவர்த்தியாகும். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர்வதற்கான வாய்ப்பு உருவாகும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். மனப்போராட்டங்கள் அகலும்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி வருகிறது. இந்த நாளில் பாவ, புண்ணியத்தை பதிந்து வைக்கும் சித்ர குப்தரை வழிபட வேண்டியது அவசியமாகும். மேலும் பைரவர் வழிபாடும் வளர்ச்சிக்கு வித்திடும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்!**

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு சுகலாபாதிபதியானவர் சுக்கிரன். அவர் உச்சம் பெறுவது ஒரு வகைக்கு யோகம் தான். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும். புத-சுக்கிர யோகமும் நீச்சபங்க இராஜயோகமும் செயற்படும் இந்த நேரத்தில் உறவினர்கள் பகை அகலும். உதாசீனப்படுத்தியவர்கள் ஓடிவந்து இணைவர். தந்தை வழி சொத்துக்களால் இலாபம் உண்டு. பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். மாற்று இனத்தைச் சார்ந்தவர்கள் உங்கள் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வருவர். மே 11 ஆம் திகதி மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். எனவே மாதக் கடைசியில் கௌரவம், புகழ், அந்தஸ்து கூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும்.

**பொன்னான புதன் சஞ்சாரம்**

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். பிறகு மே 12 ஆம் திகதி ரிஷப இராசிக்குப் புதன் செல்கிறார். இந்த இரு பெயர்ச்சிகளும் உங்களுக்கு நன்மை தரும் விதத்திலேயே இருக்கிறது. புத-ஆதித்ய யோகம் செயற்படும், மேஷ புதனின் ஆதிக்க காலத்தில் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாடு சென்று படிக்க வேண்டும் என்று ஆர்வப்பட்டவர்களுக்கு இப்பொழுது யோகம் வாய்க்கும். ரிஷப புதனின் ஆதிக்க காலத்தில் கல்யாண




வாய்ப்புகள் கைகூடலாம். உங்களுக்கோ, உங்கள் உடன் பிறப்புகளுக்கோ சுபகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும் நேரம் இது.

**மிதுன செவ்வாய் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, வீண் விரயங்கள் ஏற்படும். அதை சுப விரயங்களாக மாற்றிக்கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. வீடு கட்டுவது, கட்டிய வீட்டை பழுது பார்ப்பது, இடம் வாங்குவது, சுப நிகழ்ச்சிகளை நடத்துவது என்று செய்யலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சிறு தொகையைச் செலவிடுவீர்கள். பொலிஸாரால் ஏற்பட்ட கலக்கம் அகலும். மனக் குழப்பம் தீரும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது நல்ல விலைக்கு விற்பனையாகும். அந்த தொகையைக் கொண்டு தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி அன்று மலை வலம் வருவதோடு, சித்ரகுப்தன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

உங்களின் பொருளாதாரப் பற்றாக் குறை அகலும் மாதம் இது. தன்னம்பிக்கையோடு காரியத்தில் ஈடுபட்டு தடைகளை முறியடிப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். துன்பங்களில் இருந்து விடுதலை கிடைக்கும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். குரு பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கலாம். உயர் அதிகாரிகளின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள். பழைய ஆபரணங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சூரிய பலம் நன்றாக இருப்பதால் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் வந்து சேரும். ராகு- கேது வழிபாடும், குலதெய்வ வழிபாடும் எண்ணங்களை ஈடேற வைக்கும்.

## பற்றாக்குறை அகலும், பணத்தேவை பூர்த்தியாகும்

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விடுதலை இல்லையேல் மண் விடுதலை இல்லை

## அண்ணன் பிரபாகரன் வழியே எம்வழி

## சீறும் சிறுத்தை சீமான்

**மயிலாடுதுறையில் நாம் தமிழர் கட்சியின் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சுபாஷினியை ஆதரித்துப் பிரசாரப் பொதுக்கூட்டம். அதில் ஆவேசமாக இளைஞர் ஒருவர் கர்ஜித்துக்கொண்டிருக்கிறார் "கஜா புயலில் ஒரு கோடி மக்கள் பாதிக்கப்பட்டார்கள். கோடிக்கணக்கான தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன. பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்காமல், 'சேகுவேராவும் பிடல் காஸ்ட்ரோவும்' ஹெலிகொப்டரில் வட்டமடித்துவிட்டுச் சென்றார்கள். பிரதமர் மோடி எட்டிக்கூடப் பார்க்கவில்லை. பதினைந்தாயிரம் கோடி ரூபாய் கேட்டோம். மோடி எவ்வளவு கொடுத்தார் தெரியுமா? வெறும் 353 கோடி. பிலிப்பைன்ஸ்'க்கு 12,000 கோடி கொடுக்கிறார். ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாட்டுக்குப் பஞ்சத்தைப்போக்க 10,000 கோடி கொடுக்கிறார். தமிழகத்துக்குக் கொடுக்க அவருக்கு மனமில்லை. 'களவாணி' படத்தில் ஒரு வசனம் வரும். 'ஏன்டா உன் வீட்டுப் பிள்ளைக்கு பலூன் வாங்கிக்கொடுக்க வக்கில்லை... ஆட்டக்காரிக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்குறே...' என்று. அந்த மாதிரி இருக்கிறது மோடியின் கதை..." என்று பொங்கினார் அந்த இளைஞர். அந்த இளைஞர் நாம் தமிழர் கட்சியின் உள்ளூர் நிர்வாகி. இரு கைகளையும் விரித்து, சீமானைப்போலவே அதே உடல்மொழியுடன் ஆவேசமாகப் பேசுகிறார். அவர் பேசப் பேச எதிரே திரண்டிருக்கும் இளைஞர்கள் கூட்டம் ஆர்ப்பரிக்கிறது.**



மயிலாடுதுறையில் மட்டுமல்ல... தமிழகம் மற்றும் புதுச்சேரி என நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் இதே காட்சியைப் பார்க்க முடிகிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஊன்றப்பட்ட விதை இது. முதன்முறையாக 2016 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டது நாம் தமிழர் கட்சி. 234 தொகுதிகளில் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர். 1.1 சதவிகித வாக்குகள் கிடைத்தன. கடலூர் தொகுதியில் போட்டியிட்ட சீமான், ஐந்தாவது இடத்தைப் பிடித்தார்.

சீமான் களமிறங்கிய கடலூர் தவிர, மற்ற தொகுதிகளில் நின்ற வேட்பாளர்கள் யாரும் கவனிக்கப்படவில்லை. இடைப்பட்ட மூன்றாண்டு காலத்தில் உறுப்பினர் சேர்ப்பு, பயிற்சி முகாம் என்று களத்தில் கடுமையாக உழைத்திருக்கிறது சீமான் டீம். அதன் பலனாக, இன்றைக்குப் பெரும்பாலான தொகுதிகளில் மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய, மக்கள் மத்தியில் பேசப்படக்கூடிய அளவுக்கு நாம் தமிழர் கட்சி மாறியிருக்கிறது. புதுச்சேரி உட்பட நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் களம்காண்கிறார்கள். இடைத் தேர்தல் நடைபெறும் 18 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறார்கள்.

பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து காலம்காலமாகப் பேசப்பட்டுவரும் சூழ்நிலையில், தன் கட்சியில் 50 சதவிகிதம் பெண் வேட்பாளர்களை துணிச்சலுடன் களமிறக்கியுள்ளார் சீமான். இதில் சிலர் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் என்பது ஆச்சர்யம்.

இதுகுறித்து சீமானிடம் கேட்டபோது, "2016 தேர்தலில், 43 சதவிகிதம் பெண் வேட்பாளர்களை நிறுத்தினோம். அதுவும்கூட இந்தியா வில் எந்தக் கட்சியும் செய்யாததுதான். அதன்பிறகுதான் மம்தா பானர்ஜியும், பிஜு பட்நாயக்கும் தேர்தலில் பெண்க ளுக்கு அதிக வாய்ப்பு கொடுத்தார்கள். அதுவே எனக்கு வெற்றிதான். 'பெண் விடுதலை இல்லையேல் மண் விடு தலை இல்லை' என்று எங்கள் தலைவர் பிரபாகரன் சொல்வார். அந்த வழியில், பாலியல் வேறுபாடற்ற சமத்துவத்தின் தொடக்கம் இது" என்கிறார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களில் கணிசமானவர்கள் படித்த இளைஞர்கள். அதில், மருத்துவர்களும், பொறியாளர்களும் உண்டு. அனைவருமே பேச்சாற்றல் மிக்கவர்களாகவும், களச்செயற்பாட்டாளர்களாகவும் இருக்கிறார்கள். குறிப்பாக வடசென்னை காளியம்மாள், கோவை கல்யாணசுந்தரம், மதுரை பாண்டியம்மாள், திண்டுக்கல் மன்சூர் அலிகான், தேனி சாகுல் ஹமீது, விருதுநகர் அருண்மொழித்தேவன் உள்ளிட்ட பல வேட்பாளர்கள், மக்கள் மத்தியில் பிரபலமாகப் பேசப்படுகிறார்கள்.

இவர்களையெல்லாம் எங்கே சீமான் அடையாளம் கண்டார் என்பது சுவாரஷ்யமானது. கெயில், ஸ்டெர்லைட், நியூட்ரினோ, மீதேன், ஐதரோகாபன், கூடங்குளம் என்று முக்கியப் போராட்டக் களங்களிலிருந்து இவர்களைத் தேடிப் பிடித்திருக்கிறார் சீமான். வடசென்னை வேட்பாளர் காளியம்மாள் மீதேன், ஐதரோ காபனுக்கு எதிரான போராட்டக் களத்தில் தீவிரமாகச் செயற்பட்டவர். அவரை அடையாளம் கண்டு, தன்னுடைய இயக்கத்துக்கு ஈர்த்துவந்து வேட்பாளராக்கியிருக்கிறார் சீமான். இப்படியாக, ஒவ்வொரு வேட்பாளருக்குப் பின்னாலும் ஒரு கதை இருக்கிறது. இன்னோர் ஆச்சர்யம் என்னவென்றால், யாரை எந்தத் தொகுதியில் நிறுத்த வேண்டுமென்கிற சீமானின் உத்தி. நாகப்பட்டினத்தைச் சேர்ந்த காளியம்மாளை வடசென்னையில் நிறுத்தியிருக்கிறார் என்றால், ஆரணியைச் சேர்ந்த பிரகலதாவை விழுப்புரத்தில் நிறுத்தியிருக்கிறார். சென்னையைச் சேர்ந்த கல்யாணசுந்தரத்தை கோவையில் நிறுத்தியிருக்கிறார். எந்தச் சமரசமும் இல்லாமல், இப்படியொருத் துணிச்சலான முயற்சியைச் சீமான் செய்திருக்கிறார்.

நாம் தமிழர் கட்சியின் பிரசார மேடையும் வித்தியாசமாக இருக்கிறது. மற்ற கட்சிகள் எல்லாம் எதிராளிகளை வசைபாடுவதிலேயே அதிக நேரம் செலவழிக்கும்போது, இவர்கள் மண்சார்ந்த, சூழலியல் சார்ந்தப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுவது, கவனிக்கப்படுகிறது. "ஸ்மார்ட் சிட்டி என்று பேசுகிறார்கள். ஸ்மார்ட் வில்லேஜ் என்று பேசுவதில்லை" என்று விமர்சிக்கும் சீமான், கிராமப்புறம் குறித்தும் வேளாண் சார்ந்த தொழில் வளர்ச்சி குறித்தும் பேசுகிறார். அதுகுறித்து ஏராளமான திட்டங்களைத் தங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். உள்ளூர் அரசியல்வாதிகளையும் இவர்கள் வெளுத்து வாங்குகிறார்கள். பெரிய கட்சிகளுக்குப் பணம் ஒரு பொருட்டு அல்ல. ஆனால், இவர்களுக்கு நிதி மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. "நாற்பது தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு டெபாசிட் கட்டுவதற்கே திணறிப் போய்விட்டோம்" என்கிறார் சீமான். பிரசாரக் கூட்டங்களின்போது, கம்யூனிஸ்ட் கட்சிகளைப்போல மக்களிடம் சென்று இவர்கள் உண்டியல் வசூலில் ஈடுபடுகிறார்கள்.

பெரிய கட்சிகளுடன் ஒப்பிடும்போது சீமானுக்குக் கூடுகிற கூட்டம் குறைவானது என்றாலும், இவருக்கு வருவது தானாகக் கூடுகிற கூட்டம். இது குறித்துப் பேசும் சீமான், "மற்ற கட்சிகளைப் போலக் காசு கொடுத்து, மது கொடுத்து, பிரியாணி கொடுத்து யாரையும் நாங்கள் கூப்பிடுவது கிடையாது. சுவரொட்டிகள், துண்டுச்சீட்டுகள்கூடக் கிடையாது. நான் பேச ஆரம்பித்து, என் குரல் காற்றில் கரைந்தவுடன் இளைஞர்கள் வருகிறார்கள். காசு கொடுத்துக்கூட்டிவருபவர்களுக்கும் தன்னெழுச்சியாக வருபவர்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எல்லோரும் காசை முன்வைக்கிறார்கள். நாங்கள் கருத்துகளை முன்வைக்கிறோம். எல்லோரும் கோடிகளைக் கொட்டும்போது, நாங்கள் கொள்கையைக் கொட்டுகிறோம்" என்கிறார்.

அதேநேரத்தில், ஊடகம் தனக்கு முக்கியத்துவம் தரவில்லை என்கிற வருத்தம் சீமானுக்கு இருக்கிறது. "எப்பப் பார்த்தாலும் எடப்பாடியையும், ஸ்டாலினையும், தினகரனையுமே காட்டுறீங்க. அவங்களைப் பற்றித்தான் எழுதுறீங்க. எங்களை ஏன் கண்டுக்க மாட்டேங்கிறீங்க..." என்று ஆதங்கப்படுகிறார் சீமான். நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களின் வாக்கு சேகரிப்பு மற்றும் சீமான் பரப்புரைக் கூட்டங்கள் அனைத்தும் முகநூல் மற்றும் யூடியூப் மூலம் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இதற்கென ஐ.டி.டீம் ஒன்று அவர் கூடவே பயணிக்கிறது. நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலும் அலைபேசிகளில் இவர்களின் பேச்சுகளை நேரலையில் கண்டு ரசிக்கிறது, சீமானால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் கூட்டம்.

"நல்லாதான் சீமான் பேசுறார்னு எல்லாரும் சொல்றாங்க. ஆனா, எனக்கு வாக்குத்தான் போட மாட்டேங்குறாங்க..." என்று சிரித்துக்கொண்டே சீமான் அடிக் கடி சொல்வார். சீமான் மட்டுமல்ல, இப்போது சீமானின் தம்பிகளும் தங்கைகளும் அச்சு அசலாக சீமான் போலவே பேச்சில் வசீகரிக்கிறார்கள். அதை மக்களும் வெகுவாக ரசிக்கிறார்கள். அந்த மக்களில் எத்தனை பேர் இவர்களுக்கு வாக்குப் போடுவார்கள் என்பது வரும் தேர்தல் முடிவுகளில் தெரிந்துவிடும்!

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எதிரிகளின் இலக்கை அழிக்கவல்ல 'நிர்பய்' வெற்றிகரமாக பரிசோதனை



(ஒரிசா)

எதிரிகளின் இலக்கை அழிக்கவல்ல 'நிர்பய்' ஏவுகணை ஒரிசாவில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறையான டி.ஆர்.டி.ஓ. பல்வேறு சக்திவாய்ந்த ஏவுகணைகளை தயாரித்து வருகிறது.

கடல், ஆகாயம் மற்றும் தரையில் இருந்து சுமார் ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று எதிரிகளின் இலக்கை குறிதவறாமல் தாக்கி அழிக்கவல்ல 'நிர்பய்' ஏவுகணை ஒரிசாவில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

ஒரிசா மாநிலத்தின் பாலசோர் கடல் பகுதியில் உள்ள ஏவுதளத்தின் மூன்றாவது முனையத்தில் இருந்து நேற்று முன்தினம் முற்பகல் 11.44 மணிக்கு ஏவப்பட்ட 'நிர்பய்' ஏவுகணை 42 நிமிடம் 23 விநாடிகள் தொடர்ந்து பறந்து, நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விண்ணில் அதிக உயரத்தில் பறந்து தாக்குவதுடன் தரைமட்டத்தில் சுமார் 100 மீற்றர் உயரத்தில் பறந்து இலக்கை மணிக்கு சுமார் 865 கிலோமீற்றர் வேகத்தில் தாக்கும் திறன் 'நிர்பய்' ஏவுகணைக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம்

### அரசு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் பதற்றம் நிறைந்த பகுதிகளுக்கு அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டிற்கு அமெரிக்கர்கள் பயணம் மேற்கொள்வது குறித்து அமெரிக்க அரசு, புதிய பயண அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்தப் பயண அறிவுறுத்தலில், பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் பதற்றம் நிறைந்த பகுதிகள் வகைப்படுத்தப்பட்டு பட்டிலிடப்பட்டுள்ளன. அதற்கு ஏற்ப பொதுமக்கள் தங்கள் பயணத்திட்டங்களை வகுத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானை பொதுவாக அபாயம் நிறைந்த 3 ஆவது நிலையில் வைத்துள்ளது. பலுசிஸ்தான், கைபர் பக்துன்க்வா மாகாணம், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், இந்தியா-பாகிஸ்தான் எல்லை உள்ளிட்ட பல்வேறு இடங்களை மிகவும் அபாயகரமான 4 ஆவது நிலையில் வைத்துள்ளது.

"பாகிஸ்தானுக்குள் மற்றும் பாகிஸ்தான் அருகே விமான போக்குவரத்து மிகவும் ஆபத்தானது. போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், இராணுவ அமைப்புகள், விமான நிலையங்கள், பல்கலைக்கழகங்கள், சுற்றுலா மையங்கள், பள்ளிகள், வைத்தியசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் பயங்கரவாத குழுக்கள் தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டுகின்றனர். கடந்த காலங்களில் அமெரிக்க தூதர்கள் மற்றும் தூதரக அலுவலகங்களை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதே போன்ற தாக்குதல்கள் தொடரலாம் என தகவல்கள் வந்துள்ளன.

பயங்கரவாதத் தாக்குல்கள் நடத்தும் அபாயம் உள்ளதால் பொதுவாக பாகிஸ்தானுக்கு செல்லும் பயணத் திட்டங்களை அமெரிக்க மக்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். குறிப்பாக, மிகவும் அபாயகரமான தாக்குதல் நடக்கும் பகுதிகளான பலுசிஸ்தான், கைபர் ப-க்துன்க்வா மாகாணம், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், இந்தியா-பாகிஸ்தான் எல்லை உள்ளிட்ட இடங்களுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம்" என வெளியுறவுத் துறை தனது பயண அறிவுறுத்தலில் கூறியுள்ளது. (7)

## மோடியின் தவறை சுட்டிக்காட்ட காங்கிரஸ் நிச்சயம் போராடும்

### ராகுல் காந்தி உறுதி

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலம் கொல்லம் பகுதியில் நடைபெற்ற பிரசாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, பிரதமர் மோடியின் தவறை காங்கிரஸ் கட்சி நிச்சயம் சுட்டிக்காட்டும் என கூறியுள்ளார்.

கேரள மாநிலத்தில் பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதையடுத்து காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய கட்சிகளின் முக்கிய தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராகுல் காந்தி கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் போட்டியிடுகிறார். இதையடுத்து



கடந்த ஏப்ரல் 4 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்தார்.

இந் நிலையில் நேற்றுக் காலை கேரள மாநிலம் கொல்லம் பகுதியில் நடைபெற்ற பிரசாரப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ராகுல் காந்தி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

பிரதமர் மோடி, இந்தியாவில் காங்கிரஸின் எண்ணங்கள் முற்றிலும் அழிக்கப்படும் எனத் தெரிவித்தார். இதற்கான பதிலாக காங்கிரஸ், மோடியிடம் என்ன கூறுகிறது என்றால், நாங்கள் உங்கள் எண்ணங்களுடன் ஒத்துப்போகவில்லை. உங்கள் தவறை சுட்டிக்காட்ட நிச்சயம் போராடுவோம். தேர்தலில் உங்களை தோற்கடிப்போம். ஆனால் உங்களுக்கு எதிராக எவ்வித வன்முறையிலும் ஈடுபடமாட்டோம்.


நான் வட இந்தியாவின் அமேதி தொகுதியில் போட்டியிடுவது தான் வழக்கம். ஆனால் இம் முறை, கேரளாவில் இருந்து போராடுவேன் என தென் இந்திய மக்களுக்கு கூறவே போட்டியிடுகிறேன். மேலும் இந்தியாவை ஒரே கோணத்தில் பார்க்க இயலாது. இந்தியா ஒரே சிந்தனையை கொண்டு செயற்படவில்லை. இந்தியா பல்வேறு கோணங்களில், பலதரப்பட்ட பார்வைகளை கொண்டுள்ளது. இவை அனைத்தும் முக்கியமானவை ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

## பாரிஸ் தேவால...

## பெரும் அச்சத்தை ஏ...

### ஐ.நா.பொது...





(பாரிஸ்)

பிரான்சில் வரலாற்றுச் சின்னமாக விளங்கும் தேவாலயத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்து அச்சத்தை ஏற்படுத்துவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் கூறியுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் அமைந்துள்ள 850 வருட பழைமையான தேவாலயம் நோட்ரே டேம் கதீட்ரல் பாரம்பரிய சின்னமாக திகழும் இந்த தேவாலயத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீவிபத்தால் இந்த தேவாலயத்தின் மேற் கூரை பற்றி எரிய ஆரம்பித்தது.

கொஞ்சம் கொஞ்சமாக பரவிய தீ, தேவாலயம் முழுவதையுமே ஆக்கிரமித்து மேற் கூரை இடிந்து விழுந்தது.

தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

குறி... படு... மை... கொ... யவ... முற...

ஐ.... பே... பக்...

## தேவாலயத்தில் து...

## ஒருவர் மரணம்; ...

(டொரண்டோ)

கனடாவில் தேவாலயத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியானார்.

கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் சால்மோன் ஆர்ம் நகரிலுள்ள தேவாலயமொன்றிலேயே குறித்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தேவலாயத்தில் நேற்று முன்தினம் சிறப்பு ஆராதனை இடம்பெற்ற வேளை அங்கு ஏராளமான கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

பிரார்த்தனை இடம்பெற்ற வேளை, தேவாலயத்துக்குள்




நுழைந்த இனந்தெரியாத நபர், அவர்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்

பா...

## கர்நாடகவில் வருமான வரி...

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் நேற்று முதல்வருக்கு நெருக்கமானவர்கள் மற்றும் தொழிலதிபர்களின் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

பாராளுமன்றத் தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப்படுகிறது. இதில் முதல்கட்ட தேர்தல் 11 ஆம் திகதி முடிவடைந்தது. நாளை இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில், பணப்பட்டுவாடா மற்றும் தேர்தல் முறைகேடுகளை தடுக்க, தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் வருமான வரித்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

அவ்வகையில் கர்நாடக மாநிலம் பெங்களூர், ஹசன், மாண்டியா ஆகிய பகுதிகளில் 10 இற்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள்

நே... சா... மை... றெ... லத... நட... வ... வர... புக... சே... தெ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வெளிநாடு

## ...லய தீ விபத்து
## ...த ஏற்படுத்தியுள்ளது

### ...துச்செயலாளர் கவலை






குறிப்பாக பிரதான சின்னமாகக் கருதப்படும் ஊசி கோபுரத்தை பாதுகாக்க தீயணைப்பு வீரர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டனர். தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் அந்தக் கோபுரம் முற்றிலும் எரிந்து இடிந்து விழுந்தது.

இந்தப் பயங்கர தீ விபத்து தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் தனது டுவிட்டர் பக்கத்தில், "14 ஆம் நூற் றாண்டு முதல், உலகின் தனித் தன்மை வாய்ந்த பாரம்பரிய சின் னமாக திகழும் நோட்ரே டேம் கதீட்ரல் தேவாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் புகைப்படங்கள் எனக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸ் அரசு மற்றும் மக்களை போலவே என் எண் ணங்களும் தற்போது உள்ளன" என பதிவிட்டுள்ளார். (7)

# முஸ்லிம் பெண் உறுப்பினருக்கு எதிராக ட்ரம்ப் வன்முறையை தூண்டவில்லை

### வெள்ளை மாளிகை மறுப்பு





(வோஷிங்டன்)

முஸ்லிம் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் இல்கான் ஒமருக்கு எதிராக, ஜனாதிபதி ட்ரம்ப் வன்முறையை தூண்டவில்லை என வெள்ளை மாளிகை மறுப்புத் தெரிவித்துள்ளது.

மினசோட்டாவைச் சேர்ந்த, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் இல்கான் உமர் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுவதையும், இரட்டைக் கோபுரத் தாக்குதல் காட்சிகளையும் கலந்து ஜனாதிபதி ட்ரம்ப் தமது டுவிட்டர் பக்கத்தில் காணொலி ஒன்றை வெளியிட்டார்.

ஏதோ சிலர் செய்த வேலை என இரட்டைக் கோபுர தாக்குதலைப் பற்றி இல்கான் உமர் கூறுவது போன்ற அர்த்தத்திலும், ஆனால் தாங்கள் அதை ஒருபோதும் மறக்க மாட்டோம் என ஜனாதிபதி கூறுவது போலவும் அந்த கலப்புக் காணொலி அமைந்துள்ளது.


அமெரிக்க நாடாளுமன்றத்தின் மக்களவை சபாநாயகர் நான்சி பெலோசி இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள தோடு, காணொலியை ட்ரம்ப் உடனே நீக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இல்கான் உமர் கூறியதற்கு திரித்து அர்த்தம் கற்பிப்பதுடன், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் செயல் என கமலா ஹாரிஸ் உள்ளிட்ட ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இல்கான் உமர் மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் சபாநாயகர் நான்சி பெலோசி உத்தரவிட்டுள்ளார்.

ஆனால், இல்கான் ஒமருக்கு எதிராக ஜனாதிபதி ட்ரம்ப் வன்முறையை தூண்டவில்லை என அவரது செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் மறுப்புத் தெரிவித்துள்ளார். (7)

## ...ல் துப்பாக்கிச்சூடு
## ...ம்; ஒருவர் காயம்



பாக்கியால் சுட்டார்.

இதில் 78 வயதான முதியவர் சம்பவ இடத்திலேய பலியானார். சம்பவத்தில் மேலுமொருவர் பாடுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பி ஓட முயன்றார். ஆனால் தேவாலயத்தில் இருந்த அனைவரும் அவரை சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்துள்ளனர். பின்னர் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார், துப்பாக்கிதாரியை கைதுசெய்தனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் பயங்கரவாதத் தாக்குதல் இல்லை என்பதை உறுதிப்படுத்திய பொலிஸார், தாக்குதலுக்கான பின்னணி குறித்து தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (7)

# சுதந்திரத்தை பறிக்கும் சட்டத்தை ரத்து செய்க

### சூடான் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்து

(கார்டூம்)

சூடானில் தற்போது காணப்படும் அனைத்து கடுமையான சட்டங்கைளையும் நீக்கி இறையாண்மையும் சுதந்திரமும் கொண்ட நாடாக மாற்ற வேண்டுமென போராட்டத்தை முன்னெடுத்துள்ள அமைப்புகளில் ஒன்றான சூடான் புரொஃபஸனல் அசோசியேஸன்ஸ் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக தேசிய புலனாய்வு மற்றும் பாதுகாப்பு சேவைகள் சட்டம், பொது ஒழுங்கு சட்டம், தொழிலாளர் தொழிற்சங்கங்கள் தொடர்பான சட்டம் மற்றும் பத்திரிகை - பிரசுரங்கள் சட்டம் ஆகியவற்றை உடன் இரத்துசெய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. இவை மக்களின் சுதந்திரத்தை பறிக்கும் வகையில் காணப்படுவதாக அந்த அமைப்பின் பேச்சாளர்




மொகமட் நாஜி எலசம் குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் மக்களாட்சி ஏற்படுத்தப்படவேண்டுமென போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, தேசிய காங்கிரஸ் கட்சியை கலைத்து அதன் சொத்துக்கள் மற்றும் உடைமைகளை கண்காணிக்க வேண்டும் என்றும் பொருளாதார நிறுவனங்களை கலைத்து அதன் சொத்துக்களை நிதியமைச்சிற்கு மாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். மேலும் போராளிக் குழுக்களையும் கலைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

சூடானில் கடந்த மூன்று தசாப்தகாலமாக நீடித்த ஜனாதிபதி ஒமரின் ஆட்சி கடந்த வாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவரை சிறைபிடித்த இராணுவம், இடைக்கால இராணுவ சபையை அமைத்து நாட்டை வழிநடத்திச் செல்கின்றது. எனினும், மக்களாட்சியை ஏற்படுத்த வேண்டுமென மக்கள் வீதிகளில் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். எவ்வாறாயினும் போராட்டங்களை கலைக்க மாட்டோம் என்றும் மக்கள் தெரிவுசெய்யும் பிரதமரை நியமிப்பதாகவும் இடைக்கால இராணுவச் சபை அறிவித்துள்ளது. (7)

## ...வரித்துறையினர் சோதனை

நேற்றுச் சோதனை நடத்தினர். மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சிக்கு தொடர்புடைய நபர்கள், முதல்வர் குமாரசாமிக்கு நெருக்கமான நபர்கள் மற்றும் தொழிலதிபர்கள் வீடுகளில் இந்த சோதனை நடந்தது. பல்வேறு தொழிலதிபர்கள் வருமானத்தை கணக்கில் காட்டாமல் வரி ஏய்ப்பு செய்தது தொடர்பாக வந்த புகார்களின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (7)



# சீன மருந்துத் தொழிற்சாலையில் தீ பத்து பேர் உடல் கருகி உயிரிழப்பு!

### 12 பேர் படுகாயம்

(பீஜிங்)

சீனாவின் ஷாங்டாங் மாகாணத்தில் அமைந்துள்ள மருந்துத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

சீனாவின் ஷாங்காங் மாகாணத்தில் செயற்பட்டு வரும் மருந்துத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென தீப்பற்றியது. இந்த விபத்தில் அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் பலர் சிக்கினர்.

தகவலறிந்து அங்கு வந்த தீயணைப்புப் படையினர் ஊழியர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகியும் 2 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். பொலிஸார் விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல், இனப்பிரச்சினைத் தீர்வில் குழப்பத்தை ஏற்படுத்தியவர் ஜனாதிபதியே

## சிறிநேசன் சுட்டிக்காட்டு





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அரசியல் தீர்வு ஆகியவற்றில் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்- சிங்கள சித்திரைப் புத்தாண்டை சிறப்பிக்கும் வகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அம்பிளாந்துறை சுதந்திரம் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கலாசார விளையாட்டு விழா நடைபெற்றது.

குறித்த விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஞா.சிறிநேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மக்களை மிக மோசமான நிலைமைக்கு தள்ளிவிடக் கூடாது என்பதற்காகவே வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தோம்.

குறித்த செயற்பாட்டினால் 50 கோடிக்கும் அதிகமான நிதிகளை அபிவிருத்தி விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கையாளக் கூடிய நிலையேற்பட்டுள்ளது.

இவ்வாறு அபிவிருத்திகள் ஒரு பக்கம் இருந்தாலும் அரசியல் தீர்வு என்பதே எங்களுக்கு மிக முக்கியமான விடயமாகும்.

குறித்த அரசியல் தீர்வுக்காக நாங்கள் பேச்சுவார்த்தைகளை நம்பிக்கையுடன் முன்னெடுத்து வந்தோம். ஆனால் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அரசியல் தீர்வு விடயத்தினை குழப்பியுள்ளார்" என ஞா.சிறிநேசன் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 23 விமானங்கள் தரித்து நிற்க வசதி

## அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஆறு புதிய தரிப்பிடங்களைக் கட்டும் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் நிறைவடையும் என்று விமான நிலைய அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.ரபீக் தெரிவித்துள்ளார்.

2 இலட்சம் சதுர மீற்றர் பரப்பளவில் ஆறு புதிய விமானத் தரிப்பிடங்களை அமைக்கும் பணி 6 பில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தப் பணிகள் நிறைவடைந்ததும் ஒரேநேரத்தில் 23 விமானங்கள் தரித்து நிற்கக் கூடிய வசதிகள் கிடைக்கும்.

கடுமையான போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க இந்தப் புதிய தரிப்பிடங்கள் உதவியாக இருக்கும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# மருந்து வகைகளின் விலைகளின் பகுப்பாய்வு இறுதிக்கட்டத்தில்

## ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தையிலுள்ள மருந்து வகைகளின் விலைகளை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையின் விலைக்கட்டுப்பாட்டுக் குழு இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது. அரசாங்கம் இதுவரை 73 மருந்து வகைகளின் விலைகளை ஒழுங்குறுத்தியிருக்கிறது.

புற்றுநோயாளர்கள் பயன்படுத்தும் 95 சதவீதமான மருந்துகளை அரசாங்கம் கொள்வனவு செய்கிறது. புற்றுநோய் மருந்துகளுக்கான விலை மனுக்கோரலின் போது சமர்ப்பிக்கக் கூடிய உயர்ந்தபட்ச விலை 95 ரூபாவாகும் என்ற சுற்றுநிருபத்தையிட்டு சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

மேலும் 27 மருந்து வகைகளின் விலைகளும் ஒழுங்குறுத்தப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து தனியார் வைத்தியசாலைகளை ஒழுங்குறுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (7)

# ஆஸியில் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்றால் தமிழ்த் தம்பதியர் நாடுகடத்தப்படும் வாய்ப்புக் குறைவு



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள தேர்தலில் தொழிற்கட்சி வெற்றியடைந்தால், இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ள தமிழ்த் தம்பதியினர் அந்நாட்டிலேயே தங்குவதற்கான வாய்ப்புக் கிட்டுமென அக்கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடவுச்சீட்டு காலம் முடிவடைந்த நிலையில் அந்நாட்டில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த பிரியா, நடேசலிங்கம் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளையும் கடந்த வருடம் கைது செய்த அதிகாரிகள், அவர்களை இன்னும் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

ஆனாலும் அவர்களை அவுஸ்திரேலியாவிலேயே தங்க அனுமதிக்க வேண்டுமெனக் கூறி 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட மனுவொன்றை அந்நாட்டு அரசாங்கத்திடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையிலேயே அவுஸ்திரேலியாவின் தமிழ் சபை உறுப்பினர் ஆரன் மயில்வாகனம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெற்றோரும் பிள்ளைகளும்

அப்பாவைவிட பிள்ளைகள் புத்திசாலிகளாக இருக்கின்றார்கள்! பொதுவாக பல சந்தர்ப்பங்களிலே இதை நாம் பார்த்திருக்கின்றோம்.

இது சம்பந்தமான ஆய்வு ஒன்று அண்மையில் நடந்தது. ஐதராபாத்தில் தேசிய மனவளர்ச்சி குன்றியோருக்கான அமைப்பு மற்றும் தேசிய ஊட்டச்சத்து தொடர்பான அமைப்பு அப்படி என்று ஒன்று இருந்தது!

இந்த இரண்டு அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு ஆய்வு நடத்தினார்கள்.

ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள், பெற்றோர்கள் இவர்களையெல்லாம் போய் சந்தித்து புள்ளி விபரங்கள் சேமித்தார்கள்.

அவை எல்லாவற்றையும் தொகுத்து பார்க்கும் போது பல உண்மைகள் தெரிய வந்தன. 30 வயதிற்கு குறைவானவர்களைவிட 30 இலிருந்து 50 வயது வரைக்கும் உள்ளவர்களிடம் புத்திசாலித்தனம் அதிகமாக இருக்குதாம்.

30 வயதிற்கு மேல் உள்ள பிள்ளைகள் அவர்கள் அப்பா, அம்மாவைவிட அதிக புத்திசாலிகளாக இருக்கின்றார்களாம்!

30 வயதிற்குக் கீழே இருந்ததென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளுடைய புத்திசாலித்தனமும் பெற்றோரின் புத்திசாலித்தனமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்.

இதுவரைக்கும் நான் சொன்னதெல்லாம் ஆண் பிள்ளைகளைத்தான்.

பெண் பிள்ளைகள் எப்படித் தெரியுமா? 30 வயதிற்குக் குறைவான பெண்களிடம் அவர்களைப் பெற்றவர்களை விட புத்திசாலித்தனம் குறைவாகவே இருக்குதாம். ஓரளவுக்கு நல்ல வருவாய் உள்ள குடும்பம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கேயெல்லாம் பெற்றோர்களை விட பிள்ளைகள் புத்திசாலித்தனமாக இருக்கின்றார்கள்.

வருவாய் குறைந்த குடும்பங்களில் இப்படி இல்லை. அது கொஞ்சம் வித்தியாசப்படுகின்றது.

வருவாய் குறைந்த இடங்களில் புதல்விகளின் புத்திசாலித்தனம் கொஞ்சம் மந்தமாகத்தான் இருக்கின்றதாம்.

இன்னுமொரு ஆய்வும் நடந்திருக்கின்றது. அதாவது பெற்றவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உயரத்திலே ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா? என்று கண்டு பிடிக்கிறதுக்காக!

பொதுவாக தகப்பனாரை விட மகன்கள் உயரமாக இருக்கின்றார்களாம்.

தாயாரும்-புதல்விகளும் கிட்டத்தட்ட சம உயரமாகத்தான் இருக்கின்றார்களாம்.

30 இலிருந்து 50 வயது வரைக்கும் உள்ள ஆண்கள் அவர்கள் பெற்றோரை விட அதிக உயரம்!

20 இலிருந்து 30 வயது வரைக்கும் உள்ள இளைஞர்கள் உயரமும் அவர்கள் பெற்றோர்கள் உயரமும் கிட்டத்தட்ட சமம்!

இது எல்லாம் அந்த ஆய்வில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சின்னக் குழந்தைகள் கோபமாகப் பார்க்கின்றமாதிரி தெரிகின்றது!

இதுவரைக்கும் நீங்கள் சொல்லிக் கொண்டு வந்தது 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் பற்றித்தானே!

10 வயதிற்குக் கீழே உள்ள எங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லலையே என்கிறீர்கள்! அப்படித்தானே!

அதுதான் ஆரம்பத்திலே சொல்லிவிட்டேன். அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலிகள் என்று! அது உங்களுக்காகத்தான்! உங்களை மாதிரி இரண்டு பிள்ளைகள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் தெரியுமா? அவர்கள் இரண்டு பேருக்குமே கணக்கில் 100 இற்கு 100! ஒரு பையன் மற்றவனிடம் நீ எப்படி கணக்கிலே 100 இற்கு 100 வாங்கினாய்? எனக் கேட்டான்.

அதற்கு இவன் நான் கணக்கிலே சந்தேகம் வந்தால் வீட்டிலே எங்கள் அப்பாவிடம் கேட்டுக்கொள்ளுவேன் அதுதான் காரணம் என்றான்.

அதுசரி நீ எப்படி 100 இற்கு 100 வாங்கினாய் என்று இவன் கேட்டான்.

இதற்கு அவன் நான் கணக்கில் சந்தேகம் வந்தால் என் அப்பாவிடம் கேட்பதில்லை! அதனால்தான் 100 இற்கு 100 வாங்கினேன்! அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரின் தாக்குதலில் மனைவி பலி!

கணவர் தாக்கியதில் மனைவி பலியான சம்பவமொன்று ஹிங்குராங் கொடை - ஜயந்திபுர . நாகபொகுண பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

26 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்து ள்ளதாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு இரு வருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக நீண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதலை கணவரின் பெற்றோர்கள் தடுத்து அவர்களை சமாதானப்படுத்தியுள்ளனர். மேலும் . மோதல் இடம் பெறும் போது கணவர் மதுபோதையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் . நேற்று அதிகாலை மனைவியை அவ ரது கணவர் தேடியுள்ள நிலையில் , வீட்டு முற்றத்தில் மயக்க முற்ற நிலையில் மனைவி காணப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து கணவர் மற்றும் அவரது பெற்றோர் இணைந்து மனைவியை வைத்தியசாலைக்கு கொண்டு சென் றுள்ளனர். எனினும், வைத்தியசாலை யில் மனைவி அனுமதிக் கப்படும் போதே உயிரிழந்த நிலையிலேயே காணப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 29 வயதுடைய கணவர் கைது செய்யப் பட்டுள்ள நிலையில் , ஹிங்குராங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (7)

# ரபேல் போர் விமானங்கள் இருந்திருந்தால் இன்னும் நமக்கு சாதகமாக அமைந்திருக்கும்

## பாலகோட் தாக்குதல் குறித்து விமானப் படைத் தளபதி



(டில்லி)

பாலகோட் தாக்குதலின்போது ரபேல் விமானங்கள் இருந்திருந் தால் முடிவு இன்னும் நமக்கு சாதகமாக அமைந்து இருக்கும் என்று விமானப்படை தளபதி தனோவா கூறினார்.

காஷ்மீர் புல்வாமாவில் நடை பெற்ற பயங்கரவாத தாக்குதலு க்கு பதிலடியாக, பெப்ரவரி 26 ஆம் திகதி பாகிஸ்தான் பகுதியில் உள்ள பாலகோட்டில் பயங்கர வாதிகள் முகாம் மீது இந்திய விமானப்படை வான் தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில் டில்லியில் இந்திய விமானப்படை சார்பில் மறைந்த மார்ஷல் அர்ஜன் சிங் நூற்றாண்டு பிறந்த தினத்தை யொட்டி '2040இல் விண்வெளி சக்தி தொழில்நுட்பத்தின் தாக்கம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் விமானப்படை தளபதி பி.எஸ்.தனோவா கலந்துகொ ண்டு உரையாற்றினார். அப் போது அவர் கூறியதாவது.

பாலகோட் தாக்குதலில் நம் மிடம் இருக்கும் தொழில்நுட்ப த்தை பயன்படுத்தி துல்லியமாக தாக்கக்கூடிய ஆயுதங்கள் மூலம் மிகச்சரியாக இலக்கு தாக்கப்பட் டது. மிக்-21, பைசன்ஸ் மற்றும் மிராஜ்-2000 போர் விமானங் களை நாம் மேம்படுத்துவதன் மூலம் அடுத்தடுத்த நிகழ்வுகளில் நாம் இன்னும் சிறப்பாக செயற் பட முடியும்.

நாம் உரிய நேரத்தில் ரபேல் போர் விமானங்களை நமது படையில் இணைத்திருந்தால் இந்த முடிவு இன்னும் நமக்கு சாதகமாக அமைந்திருக்கும். ரபேல் மற்றும் தரையில் இருந்து விண்ணில் சென்று தாக்கும் ஏவுகணை எஸ்-400 ஆகியவ ற்றை நமது படையில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் அடுத்த 2 முதல் 4 ஆண்டுகளில் தொழில்நுட்பம் மேலும் நமக்கு சாதகமாக மாறும். இது 2002 ஆம் ஆண்டு நடை பெற்ற பராகராம் சம்பவத்தின் போது நடைபெற்றதைப்போல இருக்கும்.

நமது ராணுவத்தின் அனை த்து படைகளையும் விட நம்மை தான் தொழில்நுட்பம் மிகவும் பாதிக்கிறது. தரையில் உள்ள படைகள் குறிப்பாக வீரர்களுடன் போரிடும்போது கடற்படை மற் றும் விமானப்படை அதிகாரிகள் கருவிகளை இயக்குகிறார்கள். ஆனால் போர் விமானத்தில் இது மிகச்சிறிய கருவிகளாக இரு க்கும்.

மோசமான வெப்பநிலை மற் றும் காற்றழுத்த நிலைமை ஆகி யவற்றையும் பொருத்ததாக இது இருக்கும். தொழில்நுட்ப மாற்றத் திலும் விமானப்படையின் சக்தி மிகவும் பிரச்சினைக்குரியது என மேலும் தெரிவித்தார். (7)

# சட்டவிரோத மீன்பிடி; ஒன்பது பேர் கைது



(திருமலை)

சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்த ஒன்பது பேர் கிழக்கு கடற்படையினரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையை அண் டிய கடற்பகுதியில் நேற்று கிழக்கு கடற்படையினரின் ரோந்து நட வடிக்கைளின் போது தடை செய்யப்பட்டுள்ள வலைகளை பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

கிண்ணியாப் பகுதியைச் சேர் ந்த 19 - 44 வயதிற்கிடைப்பட்ட 9 பேர் இவ்வாறு கைது செய்யப்ப ட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து டிங்கி படகு வெளியில் போடும் இயந் திரமொன்று மற்றும் 305 மீற் றர் நீளமான தடை செய்யப்ப ட்டுள்ள வலையும் மீட்கப்பட்டுள் ளன.

சந்தேக நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மூதூர் மீன்வள பாதுகாப்பு அதிகாரி களிடம் ஒப்படைப்பதற்கான நட வடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# வீதி சமிக்ஞைகள் உடைப்பு வவுனியாவில் விசமிகள் அட்டகாசம்





(வவுனியா)

வவுனியா இராசேந்திரகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட் பட்ட பகுதியில் வீதிகளில் காண ப்பட்ட வீதிச்சமிக்ஞைகளை இனந்தெரியாத நபர்கள் சேத மாக்கியுள்ளனர்.

பாரதிபுரம் தொடக்கம் இரா சேந்திரகுளம் வரையிலான வீதி களில் காணப்பட்ட பாதசாரிகள் கடவை முன்னால், பேருந்து தரிப்பிடம், முன்னால் வளைவு போன்ற பதாகைகளை நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர் கள் சேதமாக்கியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் மற் றும் கிராம சேவையாளருக்கு பொதுமக்கள் தெரியப்படுத்திய மையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள் விசார ணைகளை முன்னெடுத்து வரு வதுடன் வீதி அபிவிருத்தி அதி கார சபையினர் சேதமடைந் துள்ள வீதிச்சமிக்ஞைகளை மீள அவ்விடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொ ண்டுள்ளனர். (7)

# 50 ரூபாய் தண்ணீர்ப் போத்தல் 200 ரூபாய்க்கு விற்பனை

(சிகிரியா)

சிகிரியாவுக்கு சுற்றுலா மேற் கொள்ளும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் 50 ரூபா பெறும தியான தண்ணீர் போத்தல் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்ப டுவதாக தகவல் கிடைத்துள் ளன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணி களுக்கான வாகன தரிப்பிடத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் இவ்வாறு அதிகரித்த விலையில் தண்ணீர் போத்தல்கள் விற்கப்ப டுவதாகத் தெரியவந்துள்ளது.

இதேநேரம், தனியார் விற் பனை நிலையங்களில் குடிநீர் போத்தல்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுமாயின், அது குறித்து ஆராய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சிகிரியா திட்ட முகமையாளர் தெரிவித்துள்ளார். (7)

# கிளி.இந்து மாணவர்கள் கல்விச் சுற்றுலா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்யும் முகமாக கடந்த 6,7 ஆம் திகதிகளில் பிரதி அதிபர் மு.பிரேம்குமார் தலைமையில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். இதில் தரம் 10,11 மாணவர்கள் 113 பேரும் ஆசிரியர்கள் 10 பேரும் கலந்து கொண்டனர். (7-10)

# கொழும்பில் அதிக விபத்துக்கள்

கடந்த வருடத்தை விட இந்த வருடம், புதுவருடக் காலப் பகுதி யில் அதிக விபத்துக்கள் கொழு ம்பில் இடம்பெற்றுள்ளதாக, கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் குமார் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


கடந்த 2018 ஆம் ஆண்டு புதுவருட தினத்தில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 390 பேர் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம், 415 பேர் வரையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

03



உதாரணமாக தம் பொறுப்பிலுள்ள ஏதேனும் அரச காணியொன்றை குத்தகைக்கு வழங்க புகையிரத பொது முகாமையாளர் கருதுமிடத்தும் தம் பொறுப்பிலுள்ள ஏதேனும் அரச காணியொன்றை துறைமுக ஆணையாளர் ஐந்து வருட காலத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கக் கருதுமிடத்தும் அவ்வதிகாரிகள் அரசாங்க அதிபரை / பிரதேச செயலாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் சூழ்நிலைக்கேற்ப காணி ஆணையாளர் நாயகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

அரச காணிச் சட்டங்களைப் பார்க்கும் போது அரசாங்க சொத்தாண்மை நிலவரங்கள் குறித்து குழப்பமான ஒழுங்கமைப்பைத் தருகின்றது. பல்வேறு துறைசார்ந்த திணைக்களங்கள், முகவர் நிறுவனங்கள் தமது பரிபாலனத்தின் கீழ் காணிகளை வைத்திருக்கின்றன. ஆனால் அந்தக் காணிகளும் அரசாங்கக் காணிகள் என்ற விரிவான வரைவிலக்கணத்தின் கீழ் வருகின்றன. இதன் விளைவான பல்வேறு காணிகளின் அரசாங்க முகாமைத்துவம், பல்வேறு வரைவிலக்கணங்களாலும் குழப்பமான நிலையிலுள்ளது. உதாரணமாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழ் இருந்துள்ள சில காணிகள் காடாக மாறியுள்ளன.

வனவளத் திணைக்களம் சில செயற்பாடுகளை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் இடைஞ்சல்களின்றி இக்காணிகளில் மேற்கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. அக்காடுகளுக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவும் வன பரிபாலனத் திணைக்களமும் உரிமை கோருகின்றன.

இந்தச் சொத்தாண்மைப் போராட்டத்திற்கு முக்கிய காரணம் அதிகார வரம்பு தொழிற்பாடுகளில் ஒன்றிற்கொன்றுக்குள்ள முரண்பாடுகள், ஐயப்பாடுகள், சட்ட விதிகளிலுள்ள குறைபாடுகள், நிர்வகிக்க முடியாத நடைமுறைகள் என்பனவேயாகும். ஒவ்வொரு சட்டத்தையும் அறியும் போது உங்களுக்கும் பல முரண்பாடுகள், ஐயப்பாடுகள் தோன்ற இடமுண்டு. இதுவே 13 ஆவது திருத்தச் சட்டத்திலும் உள்ள குழப்பமான நிலையாகும்.

**9.உள்ளூராட்சி சபைக்குரிய அரச காணிகள்**

"உள்ளூராட்சி சபை/நிறுவனம்" எனப்படுவது மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை எனக் கருதப்படும். அரச காணி கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் படி ஒரு கட்டளையின் மூலம் அந்தக் கட்டளையில் சிறப்பாகக் காட்டப்படுகின்ற நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட எந்த ஒரு அரச காணியையும் நிர்வகிப்பதற்காக எந்த ஒரு உள்ளூராட்சி சபைக்கும் பாராதீனம் செய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு. (Land Manual )

> ஓர் உள்ளூராட்சி சபையின் எல்லைகளுக்குள் அமைந்த காணிகளை மட்டுமே அந்த உள்ளூராட்சி சபைக்கு பாராதீனப்படுத்த முடியும். மற்றும்படி அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகைக்கு பெறமுடியும். அப்படியான சந்தர்ப்பத்திலே பெயரளவிலான குத்தகைக் கூலியை வசூலித்தல் சாதாரண வழக்கமாகும்.

இந்த ஏற்பாடுகளின்படி ஓர் உள்ளூராட்சி சபையின் எல்லைகளுக்குள் அமைந்த காணிகளை மட்டுமே அந்த உள்ளூராட்சி சபைக்கு பாராதீனப்படுத்த முடியும். ஒரு உள்ளூராட்சி சபைக்கு அதன் பரிபாலன எல்லைகளுக்கு வெளியில் அமைந்துள்ள ஒரு அரச காணி எந்த ஒரு கருமத்துக்காகவும் அந்த உள்ளூராட்சி சபைக்கு தேவைப்பட்டால் அந்தக் காணியை அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சலுகை முறையில் அந்த உள்ளூராட்சி சபைக்கு குத்தகைக்கு கொடுக்கலாம். அப்படியான சந்தர்ப்பத்திலே பெயரளவிலான குத்தகைக் கூலியை வசூலித்தல் சாதாரண வழக்கமாகும். (Land Manual).

உள்ளூராட்சி சபைக்கு பாராதீனப்படுத்தப்படும் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்துக்குள்ளே அமைந்திருப்பின் அந்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் சம்மதத்தையும் பெற்றுக் கொள்வதுடன் அப்படியில்லாத போது நகர, கிராம நிர்மாண பணிப்பாளரின் இணக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண் டும். (Land Manual ).

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்ளூராட்சி சபைக்கு வழங்கப்பட்ட உரிமையளித்தல் கட்டளையை செல்லுபடியற்றதாக்குவதற்கு அரச காணி கட்டளைச் சட்டத்தின் 30(1) பிரிவின்படி ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம், பிரதேச சபைகள் சட்டம் ஆகிய சட்டங்களில் கூறப்பட்ட தேவைகளுக்காக அரச காணிகள் அவ் உள்ளூராட்சிச் சபைகளிடம் கைமாற்றப்படுகிறது (vest).

மாநகரசபைச் சட்டத்தினாலோ, நகர சபைச் சட்டத்தினாலோ வெளியிடப்பட்ட உரிமையளித்தற் கட்டளையும் அரச காணி காணிக் கட்டளைச் சட்டத்தின் 30(1) பிரிவின் கீழ் செல்லுபடியற்றதாக்க முடியும்.

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44(1) ஆம் பிரிவின்படி உள்ளூராட்சிச் சபையொன்றுக்காக காணி சுவீகரிக்கப்பட்டு உள்ளூராட்சிச் சபைமூலம் அதற்கான செலவு நட்டஈடு கொடுப்பனவு செய்யப்பட்ட பின்பு பாராதீனப்படுத்தப்படும் காணி, காணி சுவீகரிப்புச் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 44(1) இன் கீழ் அவ் உள்ளூராட்சிச் சபைக்கு கைமாற்ற முடியும் காணி ஒன்றை வேறுவிதத்தில் சபைக்கு கைமாற்ற காணி சுவீகரிப்புச் செலவை செலுத்தாமல் அந்த இடத்தை உள்ளூராட்சி சபைக்கு கையளிக்க வேண்டுமாயின் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் விதிகளின்படி செய்யலாம்.(Land Manual ).

**10. புகையிரத திணைக்களத் திடம் உள்ள அரச காணிகள்**

இலங்கை புகையிரதச் சேவை 1864 ஆம் ஆண்டளவில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் "இலங்கை அரசாங்க ரயில்வே" (Ceylon Government Rail way) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பொருட்கள் போக்குவரத்தே அதன் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதற்கமைய நாட்டின் உற்பத்திகளை அல்லது மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காகக் கொழும்பைக் கேந்திர நிலையமாகக் கொண்டு நாட்டின் சகல பிரதேசங்களையும் இணைக்கும் வகையிலான ரயில் பாதை முறைமையை இது கொண்டிருந்தது.

மேலும், "தியவன்னா ஓய" வை இணைக்கும் நீர் வழிப்பாதை கொழும்பு நகருடன் தொடர்புபடுத்தப்பட்டு புகையிரதப் பாதையுடன் இணைந்த முன்னேற்றகரமான நீர்ப் போக்குவரத்து முறைமையொன்று கொழும்பு கோட்டையை அண்மித்த பிரதேசத்தில் காணப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. அதன் படி, இத் தேவைக்காகவும் கொழும்பு பிரதான போக்குவரத்து நிலையம், கொழும்பு சரக்கு களஞ்சியப் பிரிவு (Colombo Goods Section) மற்றும் புகையிரத நிலையத்துடன் தொடர்புபட்ட புகையிரதப் பாதை முறைமையின் தேவைப்பாடுகளிற்காகவும் அவ்வாறே எதிர்காலத் தேவைப்பாடுகளிற்காகவும்ஒதுக்கப்பட்ட பாரிய நிலப்பிரதேசம் கொழும்பு கோட்டைப்பகுதியில் புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமாகக் காணப் படுகிறது. இக்காணிகள் கொழும்பு கோட்டைப் பகுதிக்கு அண்மையில் அமைந்து ள்ளதால் அவற்றின் பெறுமதி மிகவும் உயர்வாக காணப்படுகின்றமை தெளிவானதாகும். இக்காணிகள் உட்பட புகையிரதச் சேவையை கொண்டு நடத்துவதற்காகவும் சேவையின் எதிர்கால அபிவிருத்திக்காகவும் என்ற நோக்கங்களின் கீழ் திணைக்களத்திற்கு பல இடங்களில் காணிகள் ஒதுக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

புகையிரதப் பொது முகாமையாளருக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகள் தொடர்பாக எந்தவிதக் கட்டணங்களும் அறவிடப்படுதல் ஆகாது என சட்டம் கூறுகின்றது. புகையிரதத் திணைக்கள நிதியத்தினால் சுவீகரித்துக் கொள்ளப்பட்டு கையேற்கப்பட்டுத் தமது பொறுப்பிலுள்ள அரச காணியொன்றினை வேறொரு திணைக்களத்திற்கு வழங்குவதற்கு புகையிரத பொது முகாமையாளர் விரும்பின் புகையிரதப் பொது முகாமையாளருக்கும் காணி ஆணையாளருக்கும் திறைசேரிக்கும் இடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் ஒன்றின் கீழ் அத்தகைய திணைக்களத்தினால் அத்தகைய காணி ஒன்று தொடர்பாக சந்தையில் அன்று நிலவும் விலையை புகையிரத பொது முகாமையாளருக் குச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய காணியானது மேற்கூறப்பட்ட முறையில் விலைகொடுத்து பெறப்பட்டதொன்றல்லவாயின் எத்தகைய கொடுப்பனவுகளும் தேவைப்படமாட்டாது. (land manual).

தம் பொறுப்பிலுள்ள ஏதேனும் அரச காணியொன்றை குத்தகைக்கு வழங்க புகையிரத பொது முகாமையாளர் கருதுமிடத்து 5 வருட காலத்துக்கும் குறைந்த காலத்திற்கு குத்தகைக்கு வழங்க முடியும். ஐந்து வருட காலத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கக் கருதுமிடத்து புகையிரத பொது முகாமையாளர் அரசாங்க அதிபரை / பிரதேச செயலாள ரைத் தொடர்பு கொள்ள வேண்டும். அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் சூழ்நிலைக்கேற்ப காணி ஆணையாளர் நாயகத்தைத் தொர்டர்பு கொள்ள வேண்டும். இலங்கை முழுவதும் இலங்கையின் புகையிரத சேவைக்கு ஏறத்தாழ 14500 ஏக்கர் அளவு காணி உரித்தாகக் காணப்படுவதுடன் அவை செயற்பாட்டுச் செயன்முறையைப் பேணிச் செல்வதற்கும் எதிர்காலத் தேவைக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

> இலங்கை முழுவதும் இலங்கையின் புகையிரத சேவைக்கு ஏறத்தாழ 14500 ஏக்கர் அளவு காணி உரித்தாகக் காணப்ப டுகின்றது. தம் பொறுப்பிலுள்ள ஏதேனும் அரச காணியொன்றை குத்தகைக்கு வழங்க புகையிரத பொது முகாமையாளர் கருதுமிடத்து 5 வருட காலத்துக்கும் குறைந்த காலத்திற்கு குத்தகைக்கு வழங்க முடியும்.

புகையிரதத் திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகளின்படி, செயற்பாட்டுக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்த வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் ஏற்படுகின்ற பற்றாக்குறையான நட்டம் திறைசேரிக்கு செலவாகக் காணப்படுகிறது.

அதன்படி, இப்பற்றாக்குறையை ஓரளவேனும் குறைத்துக் கொள்ளும் நோக்குடன் புகையிரதத் திணைக்களத்திற்குச்சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை பயனுள்ள வகையில் ஈடுபடுத்தி அதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமென கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2010 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியின் பயன்பாட்டிலுள்ள குறைபாடுகளாக பின்வருவனவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

"பல்வேறு காரணங்களால் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளும் கட்டடங்களும் பயனற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமைக்கான பல காரணங்கள் அதில் வெளிப்பட்டிருந்தன.

இக்காரணங்களின் அடிப்படையில் செயலாற்றல் கணக்காய்வின் முக்கியமான அவதானிப்புக்களாக பின்வருவற்றைக் குறிப்பிடலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

223

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

ஆனால் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் செய்ய வேண்டிய மேற்படி அபிவிருத்திகள் சம்பந்தமாகவோ அல்லது புதிய தொழிற்சாலைகளை மேற்படி பிரதேசங்களில் அமைப்பது பற்றியோ இராமநாதன் முயற்சி செய்ததமைக்கான எது வித ஆதாரங்களும் இல்லை.

அவருடைய 13 வருட கால பதவிக்காலத்தில் தமிழரின் அரசியல், பொருளாதார நிலைமைகளில் பாரிய மாற்றம் எதனையும் அவரால் கொண்டு வர முடியவில்லை. இதற்கான அடிப்படைக்காரணம் இராமநாதன் இலங்கையின் செல்வம் படைத்த சிங்கள, தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்திருப்பதாகவும் அவர் தனது சொந்த இனமான தமிழரின் அரசியல், பொருளாதார எதிர்காலத்தில் அவ்வளவு அக்கறை கொண்டிருக்கவில்லை எனவும் அரசியல் பேராசிரியர் வில்சன் (Professor Wilson) கருதுகின்றார்.

அத்தோடு இராமநாதன் பிரித்தானிய அரசிடமிருந்து தனது எதிர்கால சுபீட்சம் சம்பந்தமாக அதிகம் எதிர்பார்க்கிறார் என்பதையும் அக்காலத்தில் தேசாதிபதியாக இருந்த சேர்.ஆதர் கோடன் (Sir Arthur Gordon) இராமநாதனுக்கு எழுதிய கடிதத்தின் மூலம் வெளிப்படுகின்றது.

உமக்கான உயர் பதவியை (சேர் பட்டம்) நான் கேட்டுள்ளேன். அதற்கான சிபாரிசு அடுத்த ஆண்டளவில் என்னால் செய்யப்படுமிடத்து அது கவனிக்கப்படுமென நம்புவதற்குக் காரணமுண்டு.

இக்கடிதத்தின் படி1889 இல் இராமநாதனுக்குப் பிரித்தானிய அரசினால் சேர் பட்டம் (Knight hood) வழங்கப்பட்டது. 1892 இல் ஏற்பட்ட சட்டச் சீர் திருத்தத்தின்படி சட்ட நிருபண சபையில் அங்கம் வகிப்பவர்களின் காலம் 5 ஆண்டுகளாக மாற்றப்பட்டதன் விளைவாக இராமநாதன் தனது அங்கத்துவத்தை இழக்க நேர்ந்தது.

அவர் இதன் பின்னர் 1892 இல் இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக (Solicitor General of Ceylon) பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்டார்.



சேர். ஆதர் கோடன் (Sir Arthur Gordon)

மேலும் 1902 இல் கிங்ஸ் கவுன்சிலராக (King's Councilor) நியமிக்கப்பட்டார்.

1903 இல் அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்று அமெரிக்கப் பயணங்களை முடித்துக்கொண்டு அவர் தஞ்சாவூரில் (Self Exile) இருந்தார். தமிழருடைய ஒட்டுமொத்தமான பிரச்சினைகளை உள்வாங்கி அவற்றுக்கான தீர்வுகளை பிரித்தனிய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுக்க இராமநாதன் தவறிவிட்டார் என்பதையே மேற்படி விடயங்கள் காட்டி நிற்கின்றன.

அவர் தமிழரின் உண்மையான வழிகாட்டியாக இருந்திருந்தால் அவர் தனது சொந்த விருப்புக்களை விட்டு முற்றுமுழுவதுமாகத் தன்னை தமிழ் மக்களுக்காகவும் தமிழ்த் தேசத்திற்காகவும் அர்ப்பணித்திருப்பார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இராமநாதன் இலங்கைத் தேசியவாத உணர்வுகொண்ட ஒருவராகத்தான் இருந்திருக்கின்றார் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஆறுமுகநாவலரும் அவரது குழுவினரும் தமிழருடைய சமய, கலாசார, மொழி உணர்வுகளை மக்கள் மத்தியில் ஊட்டி வளர்ப்பதற்கு 1850 களிலிருந்து பெரும் பாடுபட்டனர் என்பது இதற்கு முந்திய அத்தியாயத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும் நாவலர் இராமநாதனை சட்ட நிருபண சபைக்குத் தெரிவு செய்ததன் அடிப்படை நோக்கமும் அதுவாகவே இருந்தது என்றும் கூறப்பட்டது. ஆனால் இராமநாதன் நாவலர் குழுவினுடைய எதிர்பார்ப்புக்களைப் பெரிதாக நிறைவேற்றியதாகத் தெரியவில்லை.

மாறாக இராமநாதன் இலங்கை தேசிய சங்கத்தை (Ceylon National Association) ஆரம்பித்து அவரே அதன் முதற் தலைவராக அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கும் அதன்மூலம் அதிக உள்ளூர் பிரதிநிதிகளை சட்ட நிருபண சபையில் அங்கத்துவம் வகிக்கவுமே பாடுபட்டிருக்கிறார். அவரது 10 பெப்ரவரி 1890 மகஜர் (Memorandom) இதனையே எடுத்துக்காட்டுகின்றது.

கே.எம்.டி.சில்வா இதுபற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

இலங்கை தேசிய சங்கத்தை யிட்டு அக்கறையற்றவராக உள்ளார். அரசியல் செயற்பாடுகளில் தலையிடாமல் இருப்பதில் அவர் மிக அவதானமாக இருந்தார்.

அவர் மேலும் கூறுவதாவது, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் சங்கமானது தனது வளைந்து கொடுக்காது சுய கௌரவ உணர்வினால் தொடர்ந்தும் இறுகிப் போயிருந்தது.

சுருங்கக்கூறின் பிரித்தானிய அரசு இலங்கையில் சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களில் பல மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் செய்து கொண்டிருந்த மேற்படி கால கட்டத்தில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களும் தமிழரும் அரசியல் அநாதைகளாகவே விடப்பட்டிருக்கின்றனர் என்பதனையே மேற்படி நிலைமைகள் காட்டுகின்றன.

உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் ஐந்து வருடங்களுக்கு மட்டுமே பதவியில் இருக்க முடியும் என்ற கொள்கையை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் வரை பொ. இராமநாதன் சட்ட நிருபண சபையில் தமது பதவியை ஏறத்தாழ 13 வருடங்கள் வகித்தார்.

அதன் பின்னர் அவர் தனது பதவியிலிருந்து விலக, 1893 இல் அவருடைய சகோதரர் பொ. குமாரசுவாமி சபைக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெயிலோ வெயில் தவிர்க்கும் சில வழிகள்



காலநிலை மாற்றம் என்பது இனிவரும் காலங்களில் நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள் ளப்போகும் முக்கியமான சவால்களில் ஒன்றாக இருக்கும். இக் காலநிலை மாற்றத்தினால் ஏற்படப்போகும் பாதகமான விளைவுகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சில முக்கியமான விடயங்களைத் தெரிந்துவைத்திருப்பது காலத்தின் கட்டாயமாகும்.

அதீத வெக்கை காரணமாக எமது உடலில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படலாம்.

- அதிக வியர்வை ஏற்படலாம்.
- அதீதமான பலவீனம் அல்லது களைப்பு ஏற்படலாம்.
- தலைவலி(தலையிடி) ஏற்படலாம்.
- தசைப்பிடிப்பு அல்லது தசை நோவு ஏற்படலாம்.
- சிலவேளைகளில் மயக்கம் ஏற்படலாம்.
- முகப்பருக்கள் போன்ற சிறிய சிவப்பு நிறக் கொப்புளங்கள் தோலில் தோன்றலாம். (விசேடமாக கழுத்தைச் சுற்றியும் நெஞ்சு, அரைப்பகுதி, முழங்கை மடிப்புக்கள் போன்றவற்றில் தோன்றலாம்).

மேற்குறிப்பிட்ட அசௌகரியங்கள் உங்களுக்கு ஏற்படின் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் மருத்துவ ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இவ் அதீத வெக்கையான காலப் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுபவர்களாகவும் அதிக ஆபத்துக்குள்ளாகக் கூடியவர்களாகவும் பின்வருவோர் காணப்படுகின்றார்கள்.

- கைக்குழந்தைகள் மற்றும் இளஞ்சிறார்கள்.
- 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
- அதிக உடல் நிறை மற்றும் உடற்பருமனானவர்கள்.
- அதிக சக்தியை இழக்கும் வேலைகளில் ஈடுபடுபவர்கள்.
- அதிக உடற்பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள்.
- உடலியல் நோய்களுக்கு ஆளானவர்கள். (விசேடமாக இதய நோய்கள் அல்லது உயர் குருதி அழுத்தம்).

இவர்கள் தொடர்பில் அதிக அக்கறையுடன் இருத்தல் வேண்டும்.

அதீத வெக்கையிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் நடைமுறைகளை நாம் பின்பற்றுதல் மிகவும் அவசியமாகும்.

1. போதுமானளவு கொதித்தாறிய நீரினை பருகுதல் வேண்டும். இக் காலப்பகுதிகளில் தாகம் ஏற்படும் வரை காத்திருக்காது அடிக்கடி கொதித்தாறிய நீரினைப் பருகுதல் வேண்டும்.

எமக்கு நாளொன்றுக்குத்தேவையான திரவத்தின் அளவினை பின்வரும் சூத்திரத்தின் மூலம் கணித்துக்கொள்ளலாம்.

தேவையான உடல் நிறை (கிலோ கிராம்)

திரவத்தின் அளவு = ---------
(நாளொன்றுக்கு) 30

இதனடிப்படையில் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு நாளொன்றுக்கு தேவையான திரவத்தின் அளவானது 750 மில்லிலீற்றர் தொடக்கம் 1 லீற்றர் வரையாகும். ஆரம்பப் பள்ளிப்பிள்ளைகளுக்கு 1 லீற்றர் தொடக்கம் 1.5 லீற்றர் வரையாகும். வளரும் பருவத்தினருக்கு 1.5 லீற்றர் தொடக்கம் 2 லீற்றர் வரையாகும்.

ஒருவர் போதியளவு கொதித்தாறிய தண்ணீரினை அருந்துவாராயின் அவருக்கு தாகம் ஏற்படாதுடன், நிறமற்ற சிறுநீரினையும் வெளியேற்ற முடியும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானது கடும் மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் கட்டாயமாக தண்ணீர் குடிப்பது அத்தியாவசியமானது ஆகும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானது ஓரளவு மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் தண்ணீர் குடிப்பது அவசியமானது ஆகும்.

2. பகல் வேளைகளில் வீட்டிற்கு வெளியே மேற்கொள்ளும் அலுவல்களின் போது பின்வரும் பொருத்தமான முற்காப்பு நடைமுறைகளைப் பின்பற்ற முடியும்.

- எமது நாட்டிற்கே உரித்தான பருத்தித் துணியிலான ஆடைகளை அணிதல்.
- கறுப்பு நிறத்திலான ஆடைகள் அணிவதைத் தவிர்த்தல்.
- எடை குறைந்த, தளர்ச்சியான, இலேசான நிறமுடைய ஆடைகளை அணிதல்.
- உடலானது சூரியனது தாக்கத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்காக கைகளை முழுமையாக மூடிய ஆடைகளை அணிதல். (சிறார்களை பாடசாலை மற்றும் வகுப்புக்களுக்கு கூட்டிச்செல்லும் வேளையில் அணிதல் சிறந்தது).
- சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் மரநிழல்களில் ஓய்வு எடுத்தல்.
- குடையினைப் பயன்படுத்துதல்.
- வட்டத்தொப்பிகளைப் பயன்படுத்துதல்.
- தரம் வாய்ந்த சூரியக் கண்ணாடிகளை அணிதல்.

3. உறக்கத்திற்கு செல்வதற்கு முன்னர்

- காற்றோட்ட வசதியிருப்பதை உறுதிசெய்தல்வேண்டும். அதாவது கதவு, யன்னல்களை திறந்து விடல்.
- மின்சார மின்விசிறியை பயன்படுத்தல். இதன்போது பாத்திரம் ஒன்றில் நீரினை நிரப்பி மின்விசிறிக்கு முன்னால் வைப்பதன் மூலம் எமது உடலில் இருந்து ஆவியாகும் நீரின் அளவினைக் குறைக்க முடியும்.
- படுக்கை விரிப்புக்கள் மற்றும் தலையணைகளை பருத்தித்துணியிலானதாக தெரிவு செய்தல்.

4. தினமும் நீராடுங்கள். ஒரு நாளில் பல தடவைகள் நீராடுங்கள். அல்லது ஈரத்துணியினால் உடலினை அடிக்கடி துடையுங்கள்.

5. வெயிலில் தரித்திருக்கும் வாகனங்களில் பிள்ளைகளையோ, செல்லப்பிராணிகளையோ விட்டுச் செல்லாதீர்கள். ஏனென்றால் வாகனங்கள் விரைவில் சூடாகி விடும்; இதனால் வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்படலாம்.

6. பகல் வேளைகளில் செய்யும் உங்கள் வேலைகளை திட்டமிட்டுச்செய்யுங்கள். அதிகாலை வேளைகளிலும் மாலை வேளைகளிலும் வேலைகளைச் செய்வதற்காக திட்டமிடுங்கள். சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் நிழலின் கீழ் ஓய்வெடுப்பதை மறக்க வேண்டாம். முக்கியமாக விவசாய நடவடிக்கைகள், கட்டட நிர்மாண வேலைகளின் போது கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

7. சூரியன் பிரகாசமாக ஒளிரும் வேளைகளில் வெளிச் செயற்பாடுகளை இயன்றவரை தவிருங்கள். அல்லது பிற்போடுங்கள்.

எனவே அதீத வெப்பமான காலங்களில் குறித்த முற்காப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் எமக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

சுகாதாரக் கல்விப் பிரிவு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1696

Search for people, places and things

### கமலி

ஏன்டி உன் தங்கச்சி வீட்டு வேலை செய்ய
நெட்டில ஆள் தேடுறாளாம்..
அதுக்கெல்லாமா வெப்சைடு இருக்கு!!
அது என்னமோ மட்ரிமோனியல் சைட்டுங்களாம்



### அஸ்வதி

கண்ணீர் சிந்தும்போது துடைக்க யாரும் வருவதில்லை.... கவலை கொள்ளும் போது சிரிக்க வைக்க எவரும் வருவதில்லை... அறியாமல் ஒரு தவறு செய்து பார்... உன்னை விமர்சிக்க இந்த உலகமே கூடி வரும்.



### சுஜிதா

ஒரு துளி நீரும் ஒரு உயிரைக் காப்பாற்றும்



### சித்ரா

இயற்கைக்கு மரியாதை கொடுங்கள்...
அது உங்களுக்கு திருப்பித்தரும்



### ஹேமா

நாம் எங்கே அதிகம் காயப்படுகிறோமோ,
அங்கிருந்துதான் நம் வாழ்க்கையின்
பாடம் தொடங்குகிறது



### மோனிசா

தூய்மையான உள்ளத்தை மிருகத்தாலும்
அறிய முடியும்... குருடர்களாலும் காணமுடியும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பரிசோதகர்கள் மீது தாக்குதல்; தீவிரமாக விசாரணைகள் முன்னெடுப்பு

(திருமலை)

திருகோணமலையில் இரண்டு பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களிடம் தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட கந்தளாய் பிரதேச சபையின் உறுப்பினர் உட்பட இருவரையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, கந்தளாய் வாவியில், பொலிஸ் பரிசோதகர்களின் குடும்பத்தினர் நேற்று முன்தினம் நீராடிக் கொண்டிருந்த வேளையில், அவ்விடத்திற்கு வந்த சந்தேகநபர்கள் இருவரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது சம்பவம் அறிந்து அவ்விடயத்திற்கு சென்ற பொலிஸ் பரிசோதகர்கள் இருவரையும் அவர்கள் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸ் பரிசோதகர்களின் முறைப்பாட்டுக் கமைய சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்த கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# வீசப்பட்ட லொத்தர் சீட்டுக்கு அதிர்ஷ்டமாக கிடைத்த பரிசு

## இலங்கையில் சம்பவம்

(கம்பஹா)

கம்பஹாவில் அதிஷ்டம் கிடைக்கவில்லை என வீசப்பட்ட லொத்தர் டிக்கெட் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் பணம் கிடைத்துள்ளது.

மீரிகம பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் டிக்கெட்டுக்கே இவ்வாறு அதிர்ஷ்டமாக பணம் கிடைத்துள்ளது.

வீசப்பட்ட சீட்டினை அவதானித்த லொத்தர் சீட்டு விற்பனையாளர், அதனை வாங்கியவரை தேடிச் சென்று பணத்தை வழங்கும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

புத்தாண்டு பரிசாக அவர் அதனை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மீரிகம பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் லொத்தர் சீட்டு விற்பனை செய்யும் புஷ்பகுமார பெரேரா என்பவரே இந்த செயலை மேற்கொண்டுள்ளார்.

பூகொட பிரதேசத்தை சேர்ந்த ருவன் அசங்க என்ற நபர் மீரிகம நகரத்திற்கு சென்ற சந்தர்ப்பத்தில் லொத்தர் சீட்டு ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.

அண்மையில் அந்த இடத்திற்கு சென்ற நபர் தான் கொள்வனவு செய்த லொத்தர் சீட்டிற்கு அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை என அங்கிருந்த குப்பைத் தொட்டியில் அதனை வீசியுள்ளார்.

எனினும் அந்த லொத்தர் சீட்டில் இருந்த விசேட இலக்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் கிடைக்கும் என விற்பனையாளருக்கு தெரியவந்த பின்னர் அவர் உரிமையாளரை தேட ஆரம்பித்துள்ளார்.

அதற்கமைய அதனை உரிமையாளரிடம் வழங்கியுள்ளார். தான் வீசிச் சென்ற லொத்தர் சீட்டின் பணத்தை தன்னிடமே ஒப்படைத்த குறித்த இருவருக்கும் லொத்தர் சீட்டு உரிமையாளர் நன்றியை தெரிவித்துள்ளார். (7)

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டமும் மாநாடும் யாழில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 16 ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமாகிய கே. துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாக தற்போதைய மத்திய செயற்குழுவின் இறுதிக் கூட்டம் 2019.04.26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இல. 30, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலத்தில் நடைபெறும். அத்துடன், கட்சியின் புதிய பதவிவழி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் பொதுக்குழுக் கூட்டம் 2019.04.27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கீரிமலை சிவபூமி மண்டபத்தில் நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு மாதர் முன்னணி மாநாடும் மாலை 5 மணிக்கு வாலிபர் முன்னணி மாநாடும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கட்சியின் பேராளர் மாநாடும் பிற்பகல் 3.30 மணிக்கு பொதுக் கூட்டம் நல்லூரில் சங்கிலியன் தோப்பு மைதானத்தில் கட்சித் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் பொதுச் செயலாளர் துரைராசசிங்கம் தெரிவித்தார். (7)

# மீதொட்டமுல்லை குப்பை மேட்டுப்பகுதியில் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள்



(கொழும்பு)

குப்பை மேட்டை பயன்படுத்தி முன்னேற பாடுபட்ட அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகளால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் இன்றும் கொலன்னாவை அருகில் வாழ்ந்து வருகின்றனர்.

மீதொட்டமுல்லை குப்பை மேட்டை பயன்படுத்தி அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் முன்னேறிய விதம் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்ட கணக்காய்வாளரின் அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

எனினும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டாலும் பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ள இன்னமும் அதிகாரிகள் நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. (7)

# செய்தித்துளிகள்

## கொலை செய்யப்பட்ட நிலையில் கணவன்-மனைவி சடலமாக மீட்பு

(தம்புள்ளை)

வீடொன்றிலிருந்து கொலை செய்யப்பட்ட நிலையில் கணவன் மற்றும் மனைவி ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை, கலேவெல, தேவஹூவ பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கணவனும் மனைவியும் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் 53 மற்றும் 52 வயதுடையவர்கள் என தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## மரம் முறிந்து விழுந்ததில் சில பகுதிகளில் மின் தடை



(ஹோமாகம)

ஹோமாகம, பாதுக்கை, ஹொரண, கொட்டாவ மற்றும் அவிசாவளை ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மரம் ஒன்று முறிந்து விழுந்ததன் காரணமாக இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (7)

## புகையிரதம் தடம்புரண்டதில் சேவை பாதிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த புகையிரதம் கிருலப்பனை பகுதியில் தடம்புரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் களனிவெலி வழியிலான புகையிரத சேவைகள் தாமதம் அடைவதாக புகையிரத கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

மேற்படி தடம்புரள்வால் புகையிரதப் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 160 |
| தக்காளி | 100 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 |
| கோவா | 70 | 70 | 80 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 20 | 40 |
| புடோல் | 120 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 70-100 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 140 | 80 |
| லீக்ஸ் | 20 | 90 | 160 |
| பீற்றூட் | 80 | 70 | 120 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 250 | 200-300 | 320 |
| போஞ்சி | — | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 20-40 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 130 | 140 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேவதை மகளும் நண்பர்களும்



நள்ளிரவின் கரிய இருட்டில் அந்த வீட்டைக் கண்டு பிடித்ததே பெரிய விடயமாகப்பட்டது பட்டாபிக்கு.

"இனிமேல் நடந்து போய் நம்ம குரூப் மாணவர்களைக் கண்டுபிடிக்க முடியாது. அவங்களும் நம்மைத் தேடிக்கிட்டுத்தான் இருப்பாங்க. அதனால ராத்திரி இந்த இடத்தில பாதுகாப்பா இருப்போம். விடிஞ்சதும் ஈஸியா அவங்க கூட சேர்ந்திடலாம் என்ன சொல்றீங்க?" என்று கேட்டான்.

நேசமலரும் ஷிவானியும் அதிக பயத்தில் இருந்தார்கள். அச்சுதனுக்கும் ஒரே உதறலாய்த்தான் இருந்தது. இதில் அலட்சியமாய் இருந்தது ஜஸ்டின் மட்டும்தான்.

"இதில என்ன இருக்கு. இந்த வீட்டில தங்குறதைத் தவிர வேற வழியே இல்லே. சேர் எவ்வளவோ சொன்னாரு. தனித்தனி குரூப்பா காட்டுக்குள்ளே போகாதீங்க. வழி தவறிடும்னு சொன்னாரு. பொழுதுபோன நேரத்தில கூழாங்கற்களைப் பொறுக்க இந்த ரெண்டு பெண்களும் போக நாம மூணு பேரும் இதுகளைத் தேடிக்கிட்டு இப்போ எங்கோ மாட்டிக்கிட்டோம்..." என்றான் ஜஸ்டின். ஏற்கனவே பயந்திருந்த ஷிவானி அழ ஆரம்பித்தாள்.

"எங்களாலதானே எல்லாம். இப்ப என்ன செய்யிறது?" -அவள் அழ, பட்டாபி அதட்டினான்.

"ஷிவானி அழறதை விட்டு ஆகப் போறதைப் பாரு. ஜஸ்டின் உன்னோட பென் டோர்ச்சை அடி. வீட்டில ஆள் இருக்கிற மாதிரி தெரியலையே...?"

ஐந்து பேரும் தயங்கித் தயங்கி வீட்டின் வாசலை அடைந்தார்கள். அச்சுதன் கதவில் கை வைக்க கதவு திறந்து கொண்டது.

"ஹா... இதென்ன இவ்ளோ வாசனை. பிஸ்கட், சொக்லேட் வாசனை ஆளைத்தூக்குதே..." என்றான் ஜஸ்டின்.

"ஷ்ஷ்ஷ்..." டோர்ச் உதவியால் வீட்டை ஒரு வட்டம் அடித்தான் பட்டாபி.

"காட்டுக்குள்ளே திகில் பயணம்னு சும்மா ஜாலிக்கு சொன்னேன். அதுவே நிஜமாயிடுச்சு. ஹலோ... வீட்டில யாருங்க?"

எந்தப் பதிலும் இல்லை. அது ஒரு சின்ன வீடு. ஒரு மூலையில் மேசையும், ஆறு நாற்காலிகளும் இருந்தன. சுவரில் ஒரு தண்ணீர்க் குழாய் இருந்தது. தரையில் ஒரு மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. மேசை மீது காலி தட்டுகளும் டபரா, கரண்டிகளும் இருந்தன. அறை முழுக்க வாசனையாய் இருந்தது.

"என்னடா இது... பக்கத்தில ஏதாச்சும் பிஸ்கட் பக்றறி இருக்குமோ?" -அச்சுதன் சொல்ல, நேசமலர் ஒரு டபராவை எடுத்து குழாயைத் திறந்தாள். பாத்திரம் முழுக்க நுரை போல் வர, "ஆ... இதென்ன தண்ணிக்குப் பதிலா வேற ஏதோ வருது. ஆனா ஸ்ரோபெரி வாசனை வருதே" என்றாள்.

அவர்களுக்கு ஓரளவு இருட்டு பழக்கப்பட்டு விட்டது.

நாள் முழுக்க நடந்ததன் களைப்பு, பசி, பயம் இவையெல்லாம் சேர்ந்து வெள்ளை வெளேரென்ற அத்தனை பெரிய மெத்தையைப் பார்த்ததும் ஐந்து பேரும் அதில் ஆளுக்கொரு பக்கம் விழுந்து தூங்க ஆரம்பித்தார்கள்.

"பீப்... பீப்... பீப்..." என ஜஸ்டின் கைக்கடிகாரத்தின் அலாரம் ஒலித்தது. வழக்கமாய் ஐந்து மணிக்கு அவன் எழுந்து படிப்பதற்காக அவன் அம்மா செட் பண்ணியிருந்த அலாரம் அது. பழக்கதோஷத்தில் பட்டென்று எழுந்தான் ஜஸ்டின். புலர்ந்து கொண்டிருந்த வெளிச்சத்தில் அறையில் எல்லாம் பளிச்சென்று தெரிந்தது. அறையின் சுவரை பார்த்த ஜஸ்டின் "மை காட்!" என்று கத்தினான். அவன் கத்தல் கேட்டு ஒவ்வொருவராய் விழித்துக் கொண்டனர்.

"என்னடா.... ஏன் கத்தறே?" கண்களைத் திறக்காமலேயே கேட்டான் பட்டாபி.

"டேய்... பாருடா அதிசயத்தை. இந்த அறைச் சுவர் பிஸ்கட்டால் ஆனது. பாருடா... முழுவதும் பிஸ்கட் சுவர்" கத்தினான் ஜஸ்டின்.

சுவரை லேசாக சுரண்டிப் பார்த்த ஷிவானி, "ஆமா... ஆமா..." என்றாள்.

"ஐயய்யோ... இங்கே பாருங்க" -அலறினாள் நேசமலர். அவள் கையில் நேற்று தண்ணீர் பிடித்த பாத்திரம் இருந்தது. அதில் தண்ணீருக்குப் பதில் ஐஸ்கிரீம் இருந்தது. குழாயைத் திருகினாள். அதிலிருந்து ஐஸ்கிரீம் கொட்டியது. எல்லோரும் அதிர்ச்சியிலும் ஆனந்தத்திலும் கூக்குரலிட்டனர்.

"இங்கே பாருங்க... நாம ராத்திரி படுத்திருந்தது வெறும் பெட் இல்லை. பிரெட் பெட்..." என்றான் அச்சுதன். அவர்களுக்கு மேலும் மேலும் ஆச்சரியங்கள் காத்துக் கொண்டிருந்தன.

ஆவலுடன் ஒரு பாத்திரத்தில் ஐஸ்கிரீமை நிரப்பிக் கொண்டு பெட்டிலிருந்து கொஞ்சம் பிய்த்துக் கொண்டு சாப்பிட்டு மேசையில் உட்கார்ந்த ஜஸ்டின் சாப்பாட்டுத் தட்டை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, பிரெட்டைப் போட்டு விட்டு வெறும் தட்டை கடித்துத் தின்ன ஆரம்பித்தான்.

"டேய்... என்னடா செய்றே?" -பட்டாபி கேட்க,

"இந்தப் பாத்திரங்கள் எல்லாமும்... ஏன் இந்த மேசை, நாற்காலி எல்லாமே சொக்லேட்டால் ஆனது" என்றான் ஜஸ்டின்.

இதைக் கேட்டதும் ஆனந்த இரைச்சலில் அந்த இடம் அதிர்ந்தது.

ஆளாளுக்கு பெட்டையும், தட்டையும் கடித்துத்தின்ன ஆரம்பித்தார்கள். வழிய வழிய ஐஸ்கிரீம் பிடித்து சாப்பிட்டார்கள். வயிறு நிறைய மட்டும் சாப்பிட்டு ஆட்டம் போட்டார்கள். ஒருவகையாய் பசியும் பிரமிப்பும் அடங்கியது.

"நாம கனவு காணலியே..." இரண்டாவது தட்டை மென்று கொண்டே கேட்டான் அச்சுதன்.

"சேச்சே... அஞ்சு பேரும் ஒரேமாதிரி கனவா காண முடியும். இது நிஜம்" என்றாள் ஷிவானி.

"அப்படின்னா இந்த அதிசய வீடு யாருடையது? ஒண்ணுமே புரியலையே" -இது அச்சுதன்.

"சரி... விடிஞ்சிடுச்சு... நம்ம பசியும் அடங்கிடுச்சு... புறப்படலாமா?" -கேட்டான் பட்டாபி.

"ஐயோ... இந்த அதிசய வீட்டை விட்டு எப்படி வர்றது? இப்படி ஒரு வீடு இருக்கிறதா வெளில சொன்னாக்கூட யாரும் நம்பமாட்டாங்களே..." -நேசமலர் அங்கலாய்த்தாள்.

அப்போது திடீரென்று வெளியே விமானம் தரையிறங்குவது போல் பெரும் சப்தம் எழுந்தது. பயந்து நடுங்கிப் போன சிறுவர்கள் மேசைக்கடியில் புகுந்து கொண்டனர். கதவைத் திறந்து மிகப் பெரிய பறவை ஒன்று உள்ளே வந்தது.

அதன் சிறகில் அழகான சின்னஞ் சிறுமி ஒருத்தி இருந்தாள். அச்சிறுமி குட்டி சூரியனைப் போல பிரகாசித்தாள். அவளது ஆடை முழுக்க நட்சத்திரங்கள் பதிக்கப் பெற்றிருந்தன. தலையில் பிறை நிலவை சூடியிருந்தாள். ஆனால், அவள் முகம் மட்டும் சோர்ந்து இருந்தது. சிறுமியை இறக்கிவிட்ட பறவை அவள் முன் மண்டியிட்டது.

"தேவதை மகளே... உன்னை நாள் முழுதும் பராமரிக்கும் வேலைக்காரப் பறவையாகிய நான் என்ன செய்தும் உன்னைச் சிரிக்க வைக்க முடியவில்லை. மாலையில் உன்னைக் காண வரும் உன் தாய் என்னை கோபிக்கிறார்கள். உனக்கென பிஸ்கட்டால் வீடு கட்டி பிரெட், சொக்லேட், ஐஸ்கிரீம் என்று நீ விரும்பியது போல் வீட்டை வடிவமைத்திருக்கிறேன். இருந்தாலும் நீ சந்தோசப்படவில்லை. என்ன காரணம்?" என்று கேட்டது.

தேவதை மகள் மௌனமாக மேசையைப் பார்த்தது. அவள் பார்வை போன திசையைப் பார்த்த வேலைக்காரப் பறவை மேசைக்கடியில் பார்த்து உறுமியது. அவ்வளவுதான் ஐந்து பேரும் அலறியடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

"யார் நீங்கள்? இங்கு எப்படி வந்தீர்கள்?" -அதட்டியது பறவை.

காட்டுச் சுற்றுலா வந்த இடத்தில் வழி தவறி விட்டதை விளக்கிக் கூறினான் பட்டாபி.

"தயவு செய்து எங்களை மன்னிச்சிடுங்க. நாங்க தெரியாம வந்திட்டோம். நாங்க வெளியே போயிடுறோம்" என்றார்கள் ஒருமித்த குரலில்.

வேலைக்காரப் பறவை யோசித்தது.

"பொழுது விடிந்து விட்டது. இனி யாரும் வெளியே போக முடியாது. இருட்டினால் தான் வெளியே போக முடியும். வேறு வழியில்லை. மாலை வரை அமைதியாக உட்கார்ந்திருங்கள்" என்று பணித்தது.

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். எவ்வளவு நேரம்தான் பொறுமையாக ஒரே இடத்தில் உட்கார முடியும்? அச்சுதன் நைஸ்க ஜஸ்டினிடம், "விளையாடலாமா?" என்று கேட்டான்.

ஜஸ்டின் தலையாட்ட அவர்கள் விளையாட ஆரம்பித்தார்கள். விளையாட்டு களைகட்டத் துவங்கியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த தேவதை மகள் "நானும் வரலாமா" என்று கேட்க, சந்தோசமாக வரவேற்றார்கள்.

நேரம் செல்லச் செல்ல சிரிப்பும் கும்மாளமும் காதைப் பிளந்தது. தேவதை மகள் ஆனந்தமாக விளையாடினாள். வேலைக்காரப் பறவை இதையெல்லாம் ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டிருந்தது.

தேவதை மகள் முகம் பிரகாசமாய் மலர்ந்திருந்தது. "இந்த சந்தோசத்துக்குக் காரணம் என்ன?" என்று தேவதை மகளிடம் கேட்டது பறவை.

"இத்தனை நண்பர்களுடன் சேர்ந்து நான் விளையாடியதே இல்லை. எனக்கு இதுவரை நண்பர்களும் இல்லை. நட்பு என்றால் என்ன என்று இன்றைக்குப் புரிந்து கொண்டேன். நீ எனக்காக என்ன செய்தாலும் நண்பர்களுடன் இருப்பதைப் போன்ற சந்தோசம் வராது" என்றாள்.

"சரி... நேரமாகிறது கிளம்புவோம்" -வேலைக்காரப் பறவை சிறகை விரிக்க, தேவதை மகள் நண்பர்களிடம் விடை பெற்றாள்.

"உங்களை மறக்கவே மாட்டேன். ஆசைப்பட்டவை அத்தனையும் கிடைத்தாலும் நல்ல நண்பர்கள் கிடைப்பதுதான் பெரிய விடயம். நாம் இனியும் நண்பர்களாகவே இருப்போம்... வருகிறேன்" பறவை தேவதை மகளுடன் பறந்தது.

ஐந்து பேரும் கண்ணீர் மல்க விடை கொடுத்தனர். ஒருநாள் முழுதும் எங்கே இருந்தீர்கள்?" என்று ஆசிரியர் கேட்டார்.


"வழி தவறி காட்டில் நடந்து கொண்டே இருந்தோம். இரவு ஒரு ஓடக் கரையில் தங்கியிருந்தோம்" என்றான் பட்டாபி. மற்ற நால்வரும் அதை ஆமோதித்தார்கள். தேவதை மகளின் நல்ல நட்பை இழக்க அவர்களுக்கு மனதில்லை.

## பொது அறிவு துணுக்குகள்

- பாலில் 'லாக்டிக் அமிலம்' உள்ளது.
- இன்சுலின், கணையத்தில் சுரக்கிறது.
- பெரு நாட்டின் தலை நகரத்தின் பெயர், லிமா.
- முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு, இந்தியா.

## வாத்து

குட்டி குட்டி வாத்துக்கள்
அம்மா பின்னால் போகுதே
அழகு அழகாய் நடக்குதே
பாதை நடுவே நடக்குதே
பார்த்த வண்டிகள் யாவுமே



பாந்தமாய் நின்று போகுதே
எங்கள் அப்பா வண்டியும்
நின்று கடந்து போகுதே
எந்த வண்டி சென்றாலும்
நின்று நின்று செல்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாசல் மூடி...!
மறுவாசல் வைப்பான் இறைவன்!
- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பர்

2019ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும் என்ற ஆரூடம் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டிருக்கிறது.

எனினும் 2019ஆம் ஆண்டில் எந்தத் தேர்தலை நடத்துவது என்பது பற்றி இன்னமும் தெளிவான தீர்மானங்கள் இல்லை.

இப்போதிருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கும்போது, 2019ஆம் ஆண்டில் எந்தத் தேர்தலும் நடக்காது போல் தெரிகிறது.

அரசியலமைப்புச் சட்டங்களும் சரத்துக்களும் தெளிவற்றவையாக இருந்தால், எல்லாம் இழுபறியாகவே இருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைப்புச் செய்ய; பாராளுமன்றக் கலைப்பு அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த விடயத்தை இதற்கு நல்லதொரு உதாரணமாக முன்வைக்கலாம்.

அதிலும் வேடிக்கை என்னவெனில், பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்புச் செய்ய முடியுமென்று ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் ஒருவர்தான் ஆலோசனை வழங்கியிருந்தாராம்.

அவ்வாறாயின் ஆலோசனை வழங்கிய அந்த ஓய்வுபெற்ற நீதியரசரின் முற் தீர்ப்புகள் எவ்வாறாக இருந்திருக்கும் என்று சிந்திப்பதும் அவசியமானதே.

என்ன செய்வது அரசியலமைப்பின் தெளிவின்மைகள் தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை கொடுப்பதாக அமைந்து விடுகின்றன.

இத்தகைய முன்னுரிமைகள் மிகப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தமிழர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதென்பது ஒருபோதும் சாத்தியமற்றது.

எனவே ஜனாதிபதித் தேர்தல் என்று வந்துவிட்டால், பெரும்பான்மை இனம் சார்ந்த ஒருவரை ஆதரிப்பதுதான் ஒரே வழி.

இங்குதான் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற கேள்வி எழுகிறது.

இவ்விடத்தில் மிக நிதானமாக முடிவுகளை எடுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. பெயர் குறிப்பிட்டு இவரை தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்று கூறும்போது, அவருக்கான ஆதரவு சிங்கள மக்கள் மத்தியில் அதிகரிக்க வாய்ப்புண்டு.

அதாவது தமிழர்கள் ஆதரிக்கின்றார்கள் எனத் தெரிந்துவிட்டால், அவருக்கு சிங்கள மக்களின் ஆதரவு குறைவாகவே இருக்கும்.

ஆகையால் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தில் மிக நுணுக்கமான மொழிசார் இராஜதந்திரத்தை நாம் பயன்படுத்த வேண்டும்.

அதாவது இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டக்கூடியவர்களை; ஊழலுக்கு எதிரானவர்களை; இன ஒற்றுமையை ஏற்படுத்தி அதனூடு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூடியவர்களை; நேர்மை, நீதி, ஜனநாயகப் பண்புமிக்கவர்களை தமிழ் மக்கள் ஆதரிப்பர் என்பதாக அறிக்கை விடுவதே, நாம் ஆதரிக்கக்கூடியவர் வெல்வதற்கான வழியாகும்.

இதைவிடுத்து பெயர் குறிப்பிட்டு அவரை தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள் என்று கூறினால் அந்த நபரை சிங்கள மக்கள் நிச்சயம் ஆதரிப்பர்.

# லண்டனில் கைதாகிய நால்வரும் விடுதலை

லண்டனின் லூட்டன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களும் பிரித்தானிய பொலிஸாரினால் எந்தக் குற்றசாட்டுக்களும் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லூட்டன் விமான நிலையத்தில் கடந்த புதன்கிழமை மாலை வந்திறங்கிய நான்கு இலங்கையர்கள், புகலிடம் கோர முற்பட்ட போது, பிரித்தானிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் தாங்கள் இலங்கையில் வழக்குகளை எதிர் நோக்கியிருப்பதாக, அவர்கள் விமான நிலைய அதிகாரங்களிடம் கூறியிருந்தனர்.

மறுநாள் வியாழக்கிழமை, தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் அந்த நால்வரையும் கைது செய்திருப்பதாக பிரித்தானிய பொலிஸார் கூறியிருந்தனர்.

அவர்கள் பெட்போர்ட்ஷைர் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

எனினும் இவர்களின் விடுதலை தொடர்பாக எந்த அறிவிப்பும் வெளியிடப்படாத நிலையில், நேற்று முன்தினம் பிரித்தானிய ஊடகம் ஒன்று தொடர்பு கொண்ட கேட்டபோதே, அவர்கள் விடுவிக்கப்பட்டதான தகவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் நால்வரிடமும் விசாரணைகள் தொடரும் என்றும் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## அங்குரார்ப்பண வைபவம்

சரஸ்வதி இல்லமும் ரமணாலயமும் அங்குரார்ப்பண வைபவம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையிலுள்ள காலப் பொழுதில் தெல்லிப்பழை கட்டுவன் கிராமத்தில் இடம் பெறவுள்ளது. (ம-3)

# அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தின்

### கண்ணாடிகள் அடித்து உடைப்பு

(கரணவாய்)

பாடசாலை கட்டிடத்தின் கண்ணாடிகள் இரவு நேரத்தில் அடித்து உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தின் கண்ணாடிகளே உடைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## பொதுச்சேவை ஆணைக்குழு தரம்-II

### மொழிபெயர்ப்பாளருக்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம்-II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே 24ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" எனும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவாகள்எனவும்வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (5)

# 60ஆவது ஆண்டு விழாவும் கலையரங்கு திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 60ஆவது ஆண்டுவிழாவும் கலாஜோதி கலையரங்கு திறப்பு விழாவும் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கலாஜோதி சனசமூக நிலையத்தில் தலைவர் ந.நகுலேந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்வார். (5)

# தொழில் தேடும் இளைஞர் யுவதிகளை பதிவுசெய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக தொழில் நிலையம், பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழில் நாடும் இளைஞர் யுவதிகளிற்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக யாழ். மாவட்டத்திலுள்ளசகலதொழில் தேடுபவர்களுக்கான பதிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் [illegible] வேலணை மற்றும் காரைநகர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழில் நாடுவோருக்கான பதிவுகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மேற்குறிப்பிட்ட பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (5-7)

# ஆமை பிடித்து வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது

### 8 ஆமைகளும் மீட்கப்பட்டது

ஆமைகளை பிடித்து வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து எட்டு ஆமைகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12.15 மணியளவில் மன்னார் உயிலங்குளம் பகுதியில் ஆமை பிடிப்பதாக உயிலங்குளம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு சென்ற புலனாய்வுப் பிரிவினர் எட்டு ஆமைகளை மீட்டதுடன் அதனை வைத்திருந்த நானாட்டான் பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்து மன்னார் பொலிஸில் ஒப்படைத்தனர். (ம-60)

## திருகோணமலையில் பாரிய போராட்டத்திற்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

திருகோணமலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் போராட்டமானது 2006ஆம் ஆண்டு 5 பேரை படுகொலை செய்த காந்தி சிலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு அங்கிருந்து மனித உரிமை ஆணைக்குழுவை நோக்கி ஊர்வலமாக செல்லவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அரசியல் பிரமுகர்கள், நிறுவனங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

மேலும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்தவிதமான பதிலையும் வழங்காத நிலையில், சர்வதேசமே தமக்கான தீர்வை வழங்கும் என நம்பியிருந்ததாகவும் எனினும் இலங்கைக்கு காலஅவகாசம் வழங்கி சர்வதேசமும் தம்மை ஏமாற்றிவிட்டதாக காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### தாயினும் சிறந்தவர் கடவுள்

✦ கண்ணால் பார்க்க முடியாது என்பதால் "கடவுள் இல்லை" என்று சொல்லக்கூடாது. இந்த உடம்புக் குள்ளே உறைந்திருக்கும் உயிரை நாம் எப்போதாவது கண்ணால் கண்டதுண்டா? கண்ணால் காணமுடியாது என்பதால், நாம் உயிர் இல்லாதவர்கள் என்று கூறுவது சரியா? உடம்புக்குள் உயிரும், உயிருக்குள் இறைவனும் உறைந்திருக்கின்றனர்.

✦ சின்னஞ்சிறு உதவியைச் சரியான நேரத்தில் செய்தவர்களையே நாம் நன்றியோடு நினைக்க வேண்டும். ஆனால், இறைவன் செய்தது சிறு உதவியா? இல்லை பேருதவியாகும். தாயினும் சாலப் பரிந்து நம் மீது அன்பு காட்டுபவன் இறைவன். பெற்ற தாய் இப்பிறவிக்கு உரியவள் ஆவாள். ஆனால், இறைவனோ என்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் நமக்கு தாயாக இருக்கிறான்.

✦ கடவுள் அங்கு இங்கு என்று குறிப்பிட்டு சொல்ல முடியாதபடி, பிரகாசமாய் அருளுடன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றார். பாலில் உறையும் நெய் போல, இறைவன் இப்பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்திருக்கிறார். இவ்வுலகத்தை மட்டுமே காணும் கண்களுக்கு கடவுள் தெரிவதில்லை. கடவுளை மட்டுமே காணும் கண்களுக்கு உலகம் புலப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் இரட்டைச் சத சாதனைப்பதிவு

# ஸ்ரார் ஈகிள்ஸ் அணி அபார வெற்றியுடன் இறுதியில்

மன்னாரில் நடைபெற்று வரும் டிவிசன் 3 சுற்று தொடரின் அரையிறுதி போட்டியில் ஸ்டார் ஈகிள்ஸ் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் அன்ரன் இரட்டை சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

போட்டியில் இந்து முன்னணி அணியினர் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பினை தேர்ந்தெடுத்தனர். முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள்ஸ் அணியினர் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 373 ஓட்டங்களை பெற்றுக் கொண்டன.

ஸ்டார் ஈகிள்ஸ் அணி சார்பாக அன்ரன் 108 பந்துகளை சந்தித்து 18 சிக்சர்கள் மற்றும் 24 பவுண்டரிகள் 223* ஓட்டங்களை இறுதிவரை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்தார்.





மயூரன் 39 ஓட்டங்களையும் வெற்றி 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி அணியினர் ஸ்டார் ஈகிள்ஸ் அணியின் அபார பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 128 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தனர்.

அவ்வணி சார்பாக வசந்தன் 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த அதேவேளை மற்றைய எந்த வீரரும் பிரகாசிக்க வில்லை.

பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள்ஸ் அணி சார்பாக ரெக்சன் 4 விக்கெட்டுக்களையும் தனா 3 விக்கெட்டுக்களையும் செல்வா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் ஸ்டார் ஈகிள்ஸ் அணியினர் அபார வெற்றியை பதிவு செய்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியில் அன்ரன் பெற்றுக்கொண்ட இரட்டைச்சதமானது வடமாகாணத்தில் முதல் முறையாக ஒரு தனி வீரனால் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். (க)

# எந்த இடத்திலும் இறங்கி அடிக்கத் தயார்; உலகக்கோப்பையில் இடம்பிடித்த கார்த்திக்



உலகக் கோப்பை போட்டியில் 4ஆவது வரிசையில் விளையாடக்கூடிய திறமை தன்னிடம் இருப்பதாக தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அடுத்த மாதம் தொடங்க உள்ள உலகக் கோப்பை தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டது. அதில் தமிழக வீரர்கள் தினேஷ் கார்த்திக், விஜய் ஷங்கர் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

ஏற்கனவே டோனி விக்கெட் கீப்பராக செயற்படும் நிலையில், தினேஷ் கார்த்திக் இடம்பிடித்திருப்பது அவர் துடுப்பாட்ட வீரராக தனது திறமையை காட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், அணியில் தெரிவு செய்யப்பட்டது குறித்து தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் கூறுகையில், 'உலகக் கோப்பை மிகப்பெரிய போட்டி. இதற்கான அணியில் இடம்பெறுவதை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தேன்.

உலகக் கோப்பைக்கு தெரிவு செய்யப்பட்டது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அனைத்து போட்டிகளிலும் டோனிதான் விக்கெட் கீப்பராக இருப்பார். புகைப்படத்தில் மட்டுமே எனது படம் வரும். அவர் காயம் அடைந்தால் வாய்ப்பு வரும். சிறந்த துடுப்பாட்ட வீரராக வாய்ப்பு அளிக்கப்படும். 4வது வரிசையில் விளையாடக்கூடிய திறமை என்னிடம் இருக்கிறது. பின்வரிசையில் ஆடினாலும் என்னால் ஆட்டத்தை நிறைவு செய்ய முடியும்' என அவர் தெரிவித்துள்ளார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# டோனி - கோலியை விட சிறந்த தலைவர் கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியை வழி நடத்தியவர்களில் டோனி-கோலியை விட சிறந்த தலைவர் கங்குலி தான் என இந்திய அணியின் முன்னாள் வீரர் வீரேந்தர் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியை கட்டமைத்ததில் கங்குலி மற்றும் டோனிக்கு பெரிய பங்கு இருக்கிறது. டோனி ஒருதலைவனாக வெற்றிகரமாக இரண்டு உலகக்கோப்பை, சம்பியன்ஸ் டிராபி ஆகியவற்றை வென்று கொடுத்துள்ளார்.

அதேபோல் சவுரவ் கங்குலியும் பல்வேறு சாதனைகளை செய்துள்ளார். குறிப்பாக கப்டனாக இருந்த அசாருதீன் மீது சூதாட்ட குற்றச்சாட்டு எழுந்த சமயத்தில், கங்குலியிடம் தலைவர் பொறுப்பு வந்தது. அவர் அணியை சிறப்பாக வழிநடத்தி, வெளிநாடுகளில் பல வெற்றிகளை குவித்தார்.

இதனால் டோனி-கங்குலி ரசிகர்கள் சிறந்த கப்டன் யார் என்று அடிக்கடி மோதிக்கொள்வார்கள். இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சேவாக் அளித்த பேட்டியில் கூறுகையில்,

'என்னைப் பொறுத்தவரை டோனி மற்றும் கோலியை விட சவுரவ் கங்குலி சிறந்த கப்டன் என்பேன். ஓர் அணியில் அனுபவ வீரர்கள் இல்லாதபோது, கப்டனுக்குத்தான் முழுப்பொறுப்பும்.

கங்குலி இந்திய அணிக்கு கப்டனாகும்போது அணியில் அனுபவமில்லாத வீரர்கள் தான் இருந்தனர். நிலையில்லாத இந்திய அணியை அவர் கட்டமைத்தார்' என தெரிவித்துள்ளார். மேலும், உலகக் கோப்பை தொடரில் இந்தியா-பாகிஸ்தான் மோத விருக்கும் போட்டி குறித்து அவர் கூறுகையில்,

நாட்டுக்கு நல்லது எதுவோ அதைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு வீரரின் கடமை. இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்றால், அது ஒரு போருக்குச் சமமானது. அந்தப் போரில் இந்திய அணி வெற்றி பெற வேண்டும் என பாடுபட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (க)







விடத்தற்பளை விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழா 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விடத்தற்பளை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் விடத்தற்பளை விநாயகர் விளையாட்டுக்கழக உறுப்பினர் நி.நிருசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் இணைப்பாளரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், கௌரவ விருந்தினர்களாக விடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ தி.நடராசக்குருக்கள், ஜே/331 கிராம அலுவலர் திருமதி றஜிதா றாயதீபன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சேகர், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் அதிபர் இ.நாகேந்திரம், வரணி வைத்தியசாலை வைத்தியர் வி.ஆறுமுகம், கிராம மக்கள், இளைஞர் யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வெற்றிக் கேடயங்களை விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர். (க-10-114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதங்கேணி தாளையடியில் கரைவலையுடன் வாடி தீக்கிரை



(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தாளையடியில் கரைவலை வாடி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வத்திராயனைச் சேர்ந்த அரன் என்பவரது கரவலை வாடியே இவ்வாறு விசமிகளினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக பளைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வாடியின் உரிமையாளர் தெரிவித்தார்.

வாடியினுள் கரைவலைக்கு பயன்படுத்தும் கம்பான் மடி வலையென பல தொழில் உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முறைப்பாட்டிற்கு அமைவாக பளைப் பொலிஸார் நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-64)

## சந்தேக நபர் கொலை விவகாரம்

# யாழ் மேல் நீதிமன்றில் வரும் 29ஆம் திகதி வழக்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபரைத் தடுப்புக்காவலில் வைத்து சித்திரவதை செய்த பின் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டு வழக்கில் முன்னாள் பொறுப்பதிகாரி சின்தக பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாரையும் வரும் 29ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் கட்டளை கிடைத்துள்ளதாக அநுராதபுரம் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

திசாநாயக்க முதியன்சேலாகே சின்தக நிஷாந்த பிரியபண்டார, ராஜபக்ச முதியன்சேலாகே சங்ஜீவ ராஜபக்ச, கோன்கலகே ஜயந்த, ஞானலிங்கம் மயூரன் மற்றும் வீரசிங்க தொரயலாகே ஹேமசந்திர வீரசிங்க ஆகிய ஐந்து முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்களும் மனித குலத்துக்கு எதிரான சித்திரவதைக் குற்றத்துக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அநுராதபுரம் சிறைச்சாலையில் அனுபவித்து வருகின்றனர்.

அவர்கள் ஐவருக்கும் எதிராக சிறிஸ்கந்தராஜா சுமணனை ராமநாதபுரம் என்னுமிடத்தில் வைத்து தண்டனைச் சட்டக்கோவை 140ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கூடிய காயம் விளைவித்த குற்றச்சாட்டும் மற்றும் அதே இடத்தில் வைத்து அவரைக் கொலை செய்தமைக்காக 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய கொலைக் குற்றச்சாட்டும் என 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையில் 10 சிவில் சாட்சிகள், 2 இராணுவ அதிகாரிகள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி உட்பட மொத்தம் 40 சாட்சிகள் இணைக்கப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவும் சாட்சிப் பட்டியலில் உள்ளடங்குகின்றார்.

இந்த வழக்கை ஆரம்ப விசாரணைக்காக வரும் 29ஆம் நாள் திகதியிட்டுள்ள யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், அன்றைய தினம் எதிரிகள் ஐவரையும் மன்றில் முற்படுத்துமாறு அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளையிட்டுள்ளது. (ம-101)

## சமுர்த்தி வங்கி அரச வங்கியுடன்...

தயா கமகே தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உத்தேச அடையாள வேலை நிறுத்தம் மற்றும் புதுவருடப் பணிப்புறக்கணிப்பில் நேற்று ஈடுபட்டனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் நேற்று முதல் எதிர்வரும் 29 ம் திகதிவரை திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் புத்தாண்டு சேமிப்பு வேலைத் திட்டத்தினைப் புறக்கணிக்கவும் உத்தியோகத்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சமூக உள்கட்டமைப்பு மற்றும் சிறு கைத்தொழில் துறை அமைச்சர் தயா கமகே,

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பால் சமுர்த்தி வங்கிகளின் சேவையைப் பெறுவதில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால், அனைத்து சமுர்த்தி வங்கிகளையும் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியுடன் இணைத்து விடுவதே சரியான நடவடிக்கையாக அமையும்.

சிக்கல்கள் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நிச்சயமாக தீர்வு வழங்கப்படும். அவர்களுக்கு நீதி மறுக்கப்படாது என்று தெரிவித்தார். (ம-3)

## கனேடிய உயர்ஸ்தானிகர்...

இடம் பெற்றது.

வடமாகாணத்தில் கனேடிய அரசாங்கத்தினால் மேற்கொள்ள கூடியதான அபிவிருத்தி உதவிகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதுடன் கனேடிய அரசாங்கத்தின் ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளரின் இலங்கை வருகை குறித்தும், இவ்வருகையின்போது கனேடிய அரசாங்கத்தினால் வடமாகாணத்தில் முன்னெடுக்க கூடியதான நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை ஆளுநருக்கும் இலங்கைக்கான ஈரானின் தூதுவர் Mohammad Zaeri Amirani க்குமிடையிலான சந்திப்பு நேற்று மாலை கொழும்பிலுள்ள ஈரானிய தூதரகத்தில் இடம்பெற்றது. வட மாகாணத்தின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க வேண்டு மென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரிசனைக்கும் தொலை நோக்கிற்கும் அமைய மத்திய மாகாணத்திலிருந்து நிலக் கீழ் குழாய் வழியாக வட மாகாணத்திற்கு குடிநீரினைக் கொண்டு வருவதற்கு ஈரானிய அரசின் உதவி இதன்போது ஆளுநரினால் கோரப்பட்டது.

இதற்கு சாதகமான சமிக்ஞை வெளியிட்ட ஈரானிய தூதுவர், முதற்கட்டமாக இது தொடர்பிலான சாத்தியமான வழிகளை ஆராயும் பொருட்டு இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஈரானின் மூன்று நிறுவனங்களை எந்தவித கட்டணங்களும் இல்லாமல் தன்னார்வ ரீதியில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார். (ம-3)

## மின்னல் தாக்கியதில்...

இச் சோக சம்பவம் நேற்று மதியம் யாழ் குப்பிளான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மயிலங்காடு ஏழாலை தெற்கை சேர்ந்த சகோதரர்களான 3 பிள்ளைகளின் தந்தையான திருநாவுக்கரசு கண்ணன் (வயது 49), 6 பிள்ளைகளின் தாயாரான கந்தசாமி மைனாவதி (வயது 56) உடன்பிறவா சகோதரியான 3 பிள்ளைகளின் தாயாரான ரவிக்குமார்சுதா (வயது 43) ஆகியோரே மேற்படி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மைனாவதி, சுதா மற்றும் திரவியம் ஆகியோர் நேற்றுக் காலை குப்பிளான் பகுதியில் உள்ள தோட்டத்தில் களை பிடுங்குவதற்கு சென்றுள்ளனர்.

அப்போது அவர்கள் மூவருக்கும் நண்பகல் 12.30 மணியளவில் கண்ணன் சாப்பாடு கொண்டு சென்றுள்ளார். மூவரும் உணவு உண்டுவிட்டு தென்னை மரத்துடன் கூடிய கூடாரத்தில் இளைப்பாறியுள்ளனர். இதில் கண்ணன், சுதா, மைனாவதி ஆகியோர் புல் மூட்டை மேல் இருந்துள்ளனர், திரவியம் என்பவர் நிலத்தில் இருந்தும் கதைத்துக் கொண்டிருந்துள்ளார்.

ஒரு மணி அளவில் மழை பெய்துகொண்டிருந்த போது திடீரென பாரிய சத்தம் ஒன்று கேட்டுள்ளது.

அப்போது திரவியத்தின் காலில் ஏதோ அடிப்பது போல் தோன்றியவுடன் அந்த இடத்தில் மயங்கியுள்ளார். மயக்கம் தெளிந்து எழுந்த போது ஏனைய மூவரும் மயங்கிய நிலையில் இருந்துள்ளனர்.

அயலில் உதவிக்கு யாரும் இல்லாததால் வீதிக்கு வந்து ஏனையவர்களுக்கு அறிவித்து மூவரையும் திரவியம் வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

ஆனால் அவர்கள் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ம-9,10,78,89,101,108)

# தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வில்

## ரணில், மைத்திரி இணைவு

(கொழும்பு)

தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

களுத்துறை பொம்புலுவ ஸ்ரீ சுபோதி ரஜமஹாராம மஹா விஹாரையில் இன்றையதினம் நடைபெறவுள்ளது.

சுகாதார, போசாக்கு அமைச்சு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு ஆகியன இணைந்து தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.



கடந்த சில மாதங்களாக ஜனாதிபதியும் பிரதமரும் நிகழ்வுகளுக்கு ஒன்றாக பிரசன்னமாகிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாக காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடமராட்சியில்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சியில் தொடர்ச்சியாக புல பாரிய திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் பலர் கைது செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10,60,78)

## நாடளாவிய...

தெரிவித்தனர்.

கடந்த 14 ஆம் திகதி முற்பகல் 6.00 மணிக்கும் நேற்றுக் காலை 6.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இந்த மோதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இபலோகம, ஹுங்கம, நொச்சியாகம, குலியாப்பிட்டிய, மஹஓயா மற்றும் கொலொன்ன ஆகிய பகுதிகளிலேயே இந்த மோதல் சம்பவங்கள் இடம் பெற்று 6 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## அமைச்சர் சஜித் காட்டமான...

ருமாகிய சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை, லுனுகம் வெஹர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நான் எனது தந்தையின் பெயரை வைத்து அரசியல் நடத்துவதாக சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த நாட்டில் எடுத்த பொறுப்புக்களை எல்லாம் ஊழல் மோசடி செய்து நாசமாக்கிய நபர்களே இவ்வாறு எம்மைப் பற்றி கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

மத்திய வங்கியில் என்ன செய்தார். மனைவியை வைத்து இலஞ்சம் வாங்க வழிகாட்டினார். நாட்டை ஒளி ஊட்டுவதற்கு கொடுத்த பொறுப்பை எடுத்தவுடன் நாடு இருளில் மூழ்கியது. இப்படியானவர்கள் தான் என்னைப் பற்றி கருத்துத் தெரிவிக்க முன்வந்துள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய தலைவருக்கு பிரதமர் பதவி கொடுக்கப்படப் போவதாக கூறப்படுவது குறித்து அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

கட்சியில் உள்ள ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனவும், சிலர் செய்வது போன்று தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஐ.தே. கட்சியை பாதுகாக்க வேண்டிய தேவை கட்சிக்கு இல்லையெனவும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடி, மின்னலுடன்...

பெய்த இந்த மழையினால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கில் கடந்த பல வாரங்களாக கடும் வெப்பம் நிலவியது. இதனால் மக்களும், கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் யாழில் நேற்று சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்துள்ளது. (ம-3)

## வேலைக்கு சென்ற...

யில் உள்ள கடை ஒன்றிற்கு வேலைக்கு சென்ற கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யுவதி மாலை வீடு திரும்பாத நிலையில் யுவதியின் தாயார் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நெல்லியடி பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)


### தமிழ் வகுப்புக்கள்

தரம் 06 – 11 வரையான வகுப்புக்களும் O/L மீட்டல் வகுப்புக்களுக்கான விசேட தமிழ் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

ஆசிரியர்: திரு.க.மு.நித்தி
(யா/புனித பத்திரிசியார் கல்லூரி)
நீங்களும் இணைந்து பயன்பெறுங்கள்.
தொடர்புகளுக்கு: 077 105 1015
(C-6144)

### Personal Class

இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)
தொடர்பு: 0771901245
(8492)

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
(C-6058)

### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-6089)


## நோயாளருடன் 10...

வகையில் நேரக் கண்காணிப்பு இயந்திரம் மருத்துவ நிபுணரின் அறையில் பொருத்தப்படவுள்ளது என சுகாதார அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு 7 நிமிடங்கள் போதுமானது என்று சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் யோசனையை நிராகரித்துள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மருத்துவ நிபுணர்கள் குறைந்தது 10 நிமிடங்கள் பார்வையிடவேண்டும் என்ற புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

இதேவேளை, இந்தப் புதிய நடைமுறையை தனியார் மருத்துவமனைகளும் பின்பற்றும் வகையில் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படும் என அறியமுடிகின்றது. (ம-3)

## 850 ஆண்டுகள்...

சுமார் 850 ஆண்டுகள் பழமையான இந்த தேவாலயத்தில், உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தினால் தேவாலயத்தின் மேற்கூரை மற்றும் பக்கவாட்டுச் சுவர்கள் கடுமையாக சேதமடைந்து இடிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இரண்டு மிகப்பெரிய மணிக் கூண்டு கோபுரங்கள் உள்ளிட்ட தேவாலயத்தின் முக்கிய பகுதி தீ விபத்தில் இருந்து தப்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பிரதான சின்னமாக கருதப்படும் ஊசி கோபுரத்தை பாதுகாக்க தீயணைப்பு வீரர்கள் தீவிர முயற்சி மேற்கொண்ட போதிலும் அந்த கோபுரம் முற்றிலும் எரிந்து இடிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

சுமார் 6 மில்லியன் யூரோ செலவில் இந்த தேவாலயத்தின் கோபுரம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு வந்த நிலையிலேயே இவ்வாறு தீவிபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கன்டர்...

படுத்தியுள்ளது.

இதன் போது வீதியின் ஓரமாக கடமையில் நின்ற இராணுவ பொலிஸார் மீது கன்டர் வாகனம் மோதிக் கொண்டதில் இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் மாவட்ட மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தினை ஏற்படுத்திய கன்டர் வாகனத்தின் சாரதியை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (ம-281-286)

## ஆக்கிர...

யில் பொதுமக்களின் 90 ஏக்கர் காணிகளை, யுத்தத்தின் பின்னர் தென்னை அபிவிருத்திச்சபை கைப்பற்றிக் கொண்டது. மக்கள் மீள்குடியேறிய பின்னரும், அந்த காணிகள் விடுவிக்கப்படவில்லை.

பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வேண்டுமென, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டபோதும், தென்னை அபிவிருத்திச்சபை அந்த காணிகளை விடுவிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் பொதுமக்கள் தமது காணிகளிற்குள் உள்நுழைந்து கொட்டகைகளை அமைத்தனர். (ம-3)

# மரண அறிவித்தல்

## சிவஞானம் செல்வகுமார்

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவஞானம் செல்வகுமார் அவர்கள் நேற்று (16.04.2019) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

346, கோவில் வீதி,
நல்லூர்.

தகவல் :
சி.செல்வராசா
(C-6142)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

நயினை மண்ணில்
22 . 11 . 1948



அம்பாளின் திருவடியில்
21 . 03 . 2019

## திருமதி கோபாலகிருஷ்ணன் திகம்பரேஸ்வரி

கடந்த 21.03.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி கோபாலகிருஷ்ணன் திகம்பரேஸ்வரி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (18.04.2019) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (20.04.2019) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டும் அறிந்தும் நேரிலும் தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்கெடுத்த அனைவருக்கும், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் செண்டுகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் சகல வகையிலும் உதவி புரிந்தவர்களுக்கும், எமது குடும்பத் தலைவி நோயுற்றிருந்த காலத்தில் அவர்களுக்கு வைத்திய சேவை புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் தெல்லிப்பழை வைத்தியசாலை வைத்தியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்கள். இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

30/4, தர்மலிங்கம் அவனியு,
சீனிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(8485)


### CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-6092)

### FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 22.04.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-6059)

### வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(8491)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

### நெல்லியடியில் வீடு விற்பனைக்கு

நெல்லியடி, சீனட்டி பகுதியில் அமைதியான சூழலில் சுற்றுமதில் மற்றும் நன்னீர் கிணற்றுடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு

- வாங்குபவர்களே விலையை தீர்மானிக்கலாம்
- நவீன முறையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது
- தொலைபேசி, ரீவி, Fridge, AC மற்றும் CCTV கமரா உட்பட சகல வசதிகளும் கொண்டது
- 6 பரப்பு காணி (3 பரப்பில் வாழைத்தோட்டம் உள்ளது)
- நெல்லியடி, மற்றும் உடுப்பிட்டி பிரதான வீதிகளுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

உடனடியாக விற்க வேண்டிய தேவை. அரிய வாய்ப்பை தவறவிட வேண்டாம்

தொடர்புகளுக்கு: ப. ஈஸ்வரநாதன் 021 226 3321
(8-6146)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org